நல்லாட்சி புரியுங்கள்; இன்றேல், நடவுங்கள் வெளியே!

Phone, No. 4502
விலை அணா ஒன்று!

Regd. No. M. 5458
[இலங்கை 10 சதம்

மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணதுரை M.A. MALAI MANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1 | சென்னை (26—12—49) | வெளியீடு (27—12—49) | இதழ் 126

திறமை — புத்திசாலித்தனம் தினைத்துணையும் அற்ற சர்க்கார்!

சியாங் சீன சிதைவு கண்டும் சிந்தை தெளியவேண்டாமா?

லட்சியமின்றி ஆள வந்தாரைச் சாடுகிறார் கிருபளானி

சர்க்கார் பரீட்சார்த்தக் கொள்கைகளையே மேற்கொண்டு வருகின்றனர். அரசியலில் பரீட்சார்த்தக் கொள்கைகள் வேண்டியதுதான்; ஆனால் சர்க்காருக்குலட்சியமென்பது ஒன்றிருந்தால்தான், இவற்றில் வெற்றிகாண முடியும். இந்த சர்க்காருக்கு லட்சியம் என்பதே கிடையாதே!

மக்கள் சார்பில் சர்க்கார் இயற்றும் சட்டங்கள் மீறப்படுகின்றனவென்றால், அப்படி மீறுகிறவர்கள் தண்டிக்காமல விடப்படுகிறார்களென்றால, இதைக்காட்டிலும் ஒரு வெட்கக்கேடு சர்க்காருக்கு இருக்கமுடியுமா? இதனால் சர்க்கார் ஒழுக்க மட்டுமல்ல, மக்கள் ஒழுக்கமே பறிபோகிறது ஒரு சர்க்காரின் கட்டளை நிறைவேற்றப்பெறவில்லையெனின், அது சர்க்காராக இருக்க முடியாது.

சியாங்கேஷேக்கின் சீனாவைப்போல இந்தியாவும் வீழ்ச்சியடையாதவாறு, சர்க்கார் தன்னைபத்திரப்படுத்திக்கொள்ள வேண்டுமென அசைப்படுகிறேன். கட்டளைகளும் உத்தரவுகளும் பிறப்பிக்க நம் சர்க்காருக்கு அதிகாரம் நிறைய இருக்கிறது; 'யாரேனும் குறை கூறினால் வகை துறையின்றி அவ்வுத்தரவுகளைப் பிறப்பித்து விடுகின்றனர். ஆனால் பட்டினி, பசி, இல்லாமை, போதாமை இன்ன பிறவற்றால் வாடும் பெரு மக்களுக்கான சட்டங்களைப் பிறப்பிப்பதயில்லை. கடினமான சொற்களைப் பயன்படுத்தவேண்டியிருக்கிறதேயெனவருந்துகிறேன். ஆனால் இந்நாட்டில் நல்லாட்சி நடைபெறவேண்டுமென்பதே நம விருப்பம். இன்றைய சர்க்கார் நல்லாட்சி புரிந்தால் புரியட்டும்; இன்றேல், ஏனையோர்க்காவது இடமளித்து விடட்டும். இந்த இரண்டைத் தவிர வேறு வழியில்லை. நல்லாட்சி புரியுங்கள்; இன்றேல், வெளியேறுங்கள்.

கண்ட்ரோல் (கட்டுப்பாடு) என்பதின் தத்துவம் என்ன? கள்ளமார்க்கெட்டை கடுமையாகத் தாக்கித்தகர்ப்பது தானே! சர்க்காரால கள்ளமார்க்கெட்டை ஒழிக்க முடியவில்லையென்றால், கண்ட்ரோலால் நமக்கென்ன பயன்?

மத்திய சட்டசபையில் 24-ந் தேதியன்று, சர்க்கரைப் பிரசனை பற்றி எழுந்த விவாதத்தின்போது பேசிய, ஆச்சாரிய கிருபளானி மேற கண்டவாறுபொறுப்புணர்ச்சு கலந்த ஆத்திரத்தொனியுடன் பேசியிருக்கிறார். விவாதத்தைத் துவக்கிவைத்த உணவு விவசாய மந்திரி தோழர் ஜெயராமதாஸ் தௌலத்ராம அணைமைய, நிகழ்ச்சிகள் பற்றிய முழு விசாரணையும் விரைவில் மேற்கொள்ளபட்டுமென்றும், சட்டசபையின் பிரதிநிதித்துவத்தையும சம்மதத்தையும் பெற்ற ஸதாபனமொன்று நிறுவப்பெற்று, அந்த ஸதாபனம அண்மைய (சர்க்கரை பற்றிய) நடவடிக்கைகளின ஒவ்வொரு அம்சத்தையும திர விசாரணை செய்யுமென்றும வாககுறுதி தந்திருக்கிறார்.

சர்க்கரை பிரச்னை பற்றிய இவ் விவாதம், மிகவும் 'காரசாரமாக' நடைபெற்றிருக்கிறது. சர்க்காரின போக்கையும், 'கையாலாகத்தனத்தையும்' கண்டித்து, பற்பல உறுப்பினர்கள் பலப்படப் பேசியுள்ளனா. கண்ட்ரோலை நீக்கிவிடலாமெனப் பெரும்பாலோரும் இறக்குமதிகள் தேவையென

ஏனையோரும் வற்புறுத்தியிருக்கின்றனர். 'சர்க்கரை சிண்டிகேட் வன்மையாகத் தாக்கப்பட்டிருக்கிறது.

'சர்க்கரை நிலைமையை இசசபை ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்' என மந்திரி தௌலத்ராம் கொண்டு வந்த பிரேரணைக்குப் பற்பல திருத்தங்கள்—17 திருத்தங்கள் — உறுப்பினர்களிடமிருந்து வந்துள்ளன. சர்க்கரை நெருக்கடிக்குப் பொறுப்பாளியாயிருப்போருக்குக் கடுமையான தண்டனை அளிக்க வேண்டுமெனத் திருத்தங்கள் சில சிபார்சு செய்தன.

விவாதத்தின்போது, ஆச்சாரியா கிருபளானி சர்க்காருக்கு தந்திருக்கும் 'சூடு' இச்சர்க்கரைப் பிரச்னைக்கு மட்டுமன்றி, அவர்களின் பொருத்தமும் பொறுப்பு மற்ற பற்பல கொள்கைகட்கும் ஏற்புடைத்தாகும். நேரு சர்க்காரோடு நேரடியாக (வேறுபலகாரணங்களால்!) அதிருப்தியுற்ற பலருள், கிருபளானியொருவரென்றே. சரத்சந்திரபோஸை யடுத்து இவரும 'எதையோ' மனதிலவைத்துப் பேசுகிறு

[தொடர்ச்சி 6 பக்கம் பார்க்க]

தேசீய சீன அரசுப்பிரதிநிதி 'பூச்சாண்டி' காட்டுகிறார்!

கம்யூனிஸ்டு சீனாவை அங்கீகரிப்பது இந்தியாவுக்கே ஆபத்தாம்!

—(0)—

எத்தனையோ மாறுதல்களில் இதுவொன்றெனக் கூறி 'ஆத்மதிருப்தி!'

புதுடெல்லி, டிச 25—

"இந்தியாவுடன் அதன் போராட்டகாலங்களில் உற்ற நண்பனாக இருந்து பாடுபட்ட சீனா விஷயத்தில் இந்தியா என்ன செய்யப்போகிறது? இது விஷயமாக இந்திய சர்க்காரும், இந்திய மக்களும் சிந்தித்துப்பார்க்கவேண்டியதவசியம்" என்று தேசிய சீனவின் அரசுப்பிரதிநிதி டாக்டர் சின்ஹரோ இன்று ஒரு பேட்டியில் கூறியிருக்கிறார்.

சீனக் கம்யூனிஸ்டு சர்க்காரை அங்கீகரிப்பதால் சீனர்களுக்கு எவ்வளவு பாதகம் விளைகிறதோ அவ்வளவு கேடு இந்தியர்களுக்கும் கட்டாயம் விளையும் என்றும், சரித்திரம் இதை நிரூபிக்கும் என்றும் அவர் கூறினார்.

கம்யூனிஸ்டு சீனாவின் பிரதிநிதியாக நீங்களே அரசுப்பிரதிநிதியாக இருப்பீர்களா என்று கேட்டதற்கு அது சுத்த அபத்தம் என்றும் ஒரு நாளும் கொள்கையை, தான் காற்றில் விட்டுவிட மாட்டார் என்றும் அவர் கூறினார்.

சீனா எவ்வளவோ மாறுதல்களைப் பார்த்திருக்கிறது என்றும், அத்தகைய மாறுதல்களில் இது ஒன்றும் என்றும் சீனாவின் லட்சியம் ஒருநாளும் உருக்குலைந்து விடாது என்ற நம்பிக்கை தனக்கிருப்பதாகவும் அவர் கூறினார்.

'டீ' தயாரிக்கும இயந்திரம்

லண்டன், டிச. 25—

ராணுவமே தேநீர் தயாரிக்கும் இயந்திரம் ஒன்றை, இந்திய மாணவர்கள் கண்டுபிடித்திருக்கின்றனர். இவர்கள் தங்கள் பெயர்களை இரகசியமாகவே வைத்திருக்கின்றனர்.

இந்து அறநிலையப் பாதுகாப்பு மசோதா

பீகாரிலும் வருகிறது

இந்து அறநிலைய ஸ்தாபனங்களைச் சரிவர நிர்வகிக்கும் பொருட்டு, இந்துமத தர்ம பரிபாலன மசோதா பீகார் சட்டசபையில் மந்திரி டாக்டர் சையத் மஹமூதினால் கொண்டுவரப்பட இருக்கிறது.

கோவில்களின் வழிபாடு, டிரஸ்டிகள் இவைகளில் எவ்விதத் தலையீடும் இருக்காது என்பது இம்மசோதாவில் விளக்கப்பட்டிருக்கும்.

ஜைனர்கள் தங்கள் மத ஸ்தாபனங்களுக்காகத் தனி போர்டுகள் ஏற்படுத்தவும் இம்மசோதா வகை செய்கிறது.

'விழிப்புடனிருந்து ஜப்பானைக் காக்கவும்'

கம்யூனிஸ்டு ஆபத்தெனக் கலங்குகிறது "கார்டியன்"

அமெரிக்காவின் பொறுப்புப் பற்றி விளக்கம்

லண்டன், டிச 25—

ஜப்பான் நேசநாடுகளுக்கு உபயோகமில்லாமல் இருந்தாலும், கூட ரஷ்யாவுக்கு உபயோகப்படாமல் பார்த்துக்கொள்ளவேண்டியது அவசியம் என்று மாஞ்செஸ்டர்கார்டியன் எச்சரித்திருக்கிறது.

காமன்வெல்த் மாநாட்டில் ஜப்பானிய சமாதான ஒப்பந்தம் விஷயமாக விவாதிக்கப்படவிருப்பதை குறிப்பிட்டு அப்பத்திரிகை எழுதியிருப்பதாவது:—

ஜப்பானினால் அனுகூலம் உண்டு, இல்லை என்று இருவித அபிப்பிராயங்கள் அமெரிக்க ராணுவத்தலைவர்களிடையே ஏற்பட்டிருக்கிறது. நமக்கு அனுகூலமாக இராவிட்டாலும், ரஷியாவுக்கு அது ஒருசப்பளமாகவே ஆகக்கூடும். அப்படி ஆகாதிருக்க அதை தடுக்க வேண்டியது அவசியம்.

ஜப்பானில் கம்யூனிஸ்டு புரட்சி ஏற்படும்படி செய்வது அப்படியொன்றும், முடியாத காரியமல்ல. 1941-ல் ஸ்டாலினுக்கும் மட்ஸூவோகோவும் ஏற்பட்ட உடன்பாட்டை மறந்துவிடலாகாது.

ஜப்பானைவிட்டு அமெரிக்கா வெளியேறுவது ஆபத்து

அமெரிக்கா ஜப்பானைவிட்டுவெளியேறிவிடுவது என்பது மாபெரும் ஆபத்தை விலைக்கு வாங்குவதாகும். இப்பொழுது அடக்கப்பட்ட ஜப்பான், மீண்டும் தலைதூக்கி வாலை ஆட்டாது என்பது என்ன நிச்சயம்? ஆகவே, பொருளாதார விஷயத்தில் ஒரு கட்டுப்பாடு இல்லாத எந்த சமாதான உடன்படிக்கையாலும் என்ன பயன்.

—ஞோப்

டிக்கட் வசூலிக்க டிராம் கண்டக்டர்கள் மறுப்பு!

—(0)—

ஹாங்காங்கில் விநோத வேலை நிறுத்தம்!

ஹாங்ஹாங், டிச. 25—

ஹாங்ஹாங்கில் டிராம்வே தொழிலாளர்கள் தங்கள் கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டுவிட்டதை யொட்டி, வேலையை 'ஏனோதானோ' வென்று செய்வதென ஆரம்பித்திருக்கின்றனர்.

கண்டக்டர்கள், டிக்கட்டுகளைப் பிரயாணிகளிடமிருந்து வாங்க மறுக்கின்றனர். இதன் காரணமாக, இலவசப் பிரயாணம் மிகவும் அதிகரித்திருக்கிறது.

இதனால் பஸ்ஸில் பிரயாணம செய்பவர்கள் கூட்டம் குறைந்திருக்கிறது.

ராணுவச் சட்ட அமுலை நீக்குக!

புதிதாகத் தேர்ந்தெடுக்கப்படும் பார்லிமெண்ட், ஜனவரியில் கூடுவதற்கு முன்பாகவே, ராணுவச் சட்ட அமுல் அடியோடு நீக்கப்பட வேண்டுமென்று எகிப்து பத்திரிகை ஆசிரியர்கள் சங்கம் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கின்றனர்.

லண்டன், டிஸ, 25—

இந்து மகா சமுத்திரத்திலுள்ள தீவுகளைப்பற்றி ஆராய்வதற்கென்றே 'வில்லியம் ஸ்கோர்ஸ்பி' என்ற கப்பல் லண்டனை விட்டு கிளம்பியுள்ளது. — ஞோப்

மாலை மணி

சென்னை 26—12—49 திங்கட்கிழமை

மணம் கமழும் தமிழிசை

இவ்வாண்டின் இறுதித் திங்களின் இறுதிவாரமாகிய இவ்வாரத்தில் வழக்கம்போல், இசை விழாக்கள், சென்னையம்பதியிலே தொடங்கப்பட்டுவிட்டன. எழிசைத் தமிழின் ஏழாவது ஆண்டு விழாவும் எழில் பெறத் துவக்கப்பட்டு, நடைபெறுகொண்டிருக்கிறது.

தமிழ்நாட்டில் தமிழை வெறுத்து, 'ஸங்கீதம்' பாடித்திரியும், தமிழிசையின் பரம்பரை வெறுப்பாளர்களும், விழாக் கூட்டி, தங்களுக்கேற்றவகையில் நடத்தவருகின்றனர். தமிழகத்தில் இனியும் அவர்களுக்கு இடம் இருந்துவருகிறது என்பதை அது எடுத்துக்காட்டுகிறது. அவ்வளவுதான்!

காலத்திற்கும் கருத்திற்கும் ஏற்றவகையில், தமிழிசை இயக்கம் முழுதும் மறுமலர்ச்சி பெற்றுவிடவில்லை என்றாலும், தமிழில் பாடி, மக்களை மகிழ்விக்கவேண்டும் என்ற எண்ணத்தின் முயற்சியாகத், தமிழிசை விழா நடைபெறுவது பாராட்டுவதற்குரியதுதான். சமஸ்கிருதம் கலந்த தெலுங்கு மொழியில், முன்பெல்லாம் எப்படி 'சங்கீதம்' பாடிக்கண்பித்தார்களோ, அதைப்போலவேயும் அதோடுகூட, தனியதூய-தனித்தமிழில் புரியக்கூடிய விதத்திலும் பாடி, மக்களை மிகநன்கு மகிழ்விக்க முடியும் என்பதைச், சென்ற ஆறு ஆண்டுகளாக நடத்திக்காட்டப்பட்ட தமிழிசை விழாக்கள், செவ்வனே எடுத்துக்காட்டிவிட்டன. அந்த அளவுக்காவது தமிழிசை மறுமலர்ச்சி பெற்றது குறித்து, நாம் மகிழ்ச்சியுறாமலிருக்க முடியாது.

தமிழன் தன் காதுக்கு இன்பமூட்டும் இசையைக், கருத்துக்கும் இன்பமூட்டும் இசையாகப்பெற வேண்டும் என்ற ஆவலுணர்ச்சியால் உந்தப்பட்டுத், தாய்மொழித் தமிழிலேயே, இசை கேட்க விரும்பினான். அதன் விளைவே தமிழிசை இயக்கம்! அப்படிப் பட்டத் தூய தமிழிசை நுகர வேண்டும் என்ற எண்ணம் அரும்பெடுக்க ஆரம்பித்த காலத்தில், வஞ்சக எண்ணங்கொண்ட தமிழன் பரம்பரை வைரிகள், பிறமொழி வெறுப்பின் காரணமாகவே, தமிழர்கள் தமிழிசை கேட்கின்றனர் என்ற பொய்ப்பித்தலாட்டக் கருத்தை நாட்டில் பரப்பத் தொடங்கினர். என்றாலும், அவர்களின் பித்தலாட்ட எண்ணம் வெற்றிபெறவில்லை. தமிழன் தமிழிலேயே தன் இசையைக் கேட்க விரும்பினான்; எனவே, தமிழிசை வேண்டினான் அதனால், வேற்றுமொழி இசை விரும்பிகளுக்குப் போதுமான மதிப்பும் வரும்படியும் ஏற்படவில்லை என்ற காரணத்திற்காகத், 'துவேஷம்' என்று கூறும் தலைக் கிறுக்குத் தாங்கிய தமிழிசை இயக்கத்தைத் தடுத்துக், 'கருநாடக ஸங்கீதத்தின்' மூலம் தம் பெருவயிற்றைக் கழுவிக் கொண்டே வாழலாம் என்று எண்ணினர். அது பலிக்கவில்லை! உண்மையிலேயே தமிழிசை ஆர்வம் கொழுந்துவிட்டெரியத் தொடங்கியது! அது கண்டு எரிச்சல் கொண்டவர்கள் இன்னமும் இருக்கத்தான் செய்கிறார்கள்! போதுமான அளவுக்கு உறக்கத்தினின்றும் தமிழன் விழித்தெழவில்லை, என்ன செய்வது!

ஏழாவது தமிழிசை மாநாட்டைத் துவக்கிவைத்தக் கவிஞர் நாமக்கல்லார், அரிய கருத்துக்கள் சில பொதிந்த சொற்பொழிவை நிகழ்த்தியுள்ளார். வழக்கம்போல் அவருடைய பேச்சில், பயன்படாத கடவுள் பக்தி, வேண்டாத பழமைக் கருத்துக்கள் நிறைந்திருக்கின்றன என்றாலும், அவற்றை நீக்கி விட்டுப் பார்த்தால், சில நல்ல கருத்துக்களும் தென்படுகின்றன.

'கலையை வெறுங், கலைஇன்பத்துக்காகப்பட்டும் அனுபவிக்கவேண்டும் என்பது பயனற்றது. கேட்பவர்கள் நல்லுணர்ச்சிகளைக் கிளப்பிவிட்டு வாழ்க்கைக்கு உதவாத வெறும் கலை, கறி சமைக்க உதவாத காய்போலத்தான், கலையின்பம் கலையைப் புகட்ட ஒரு கருவியாக இருக்க வேண்டும்''

என்று கூறியிருப்பது, வரவேற்றுப் பாராட்டத்தக்கதாகும்.

இசைமூலம் ஏற்படும் உணர்ச்சி மனித வாழ்வின் முன்னேற்றத்திற்கும், உயர்வுக்கும் பயன்படும் விதத்தில் இருக்கவேண்டும். முன்னேற்றமும், உயர்வும் ஏற்பட இசையோடு சேர்த்துக் குழைத்து ஊட்டப்படும் கருத்துக்கள் காரணமாக இருக்க வேண்டும். இப்பொழுது தமிழிசை தமிழாகியிருக்கிறதே தவிர, அது கொடுக்கும் கருத்துக்கள் மூடநம்பிக்கையையும், குருட்டுப் பழக்க வழக்கத்தையும், தேவையற்ற பக்தியையும் கொடுக்கும் கடவுட், மத, புராண, இதிகாச சம்பந்தமானவையாகவே இருந்துவருகின்றன. தமிழிசை முழுமலர்ச்சி அடைய வேண்டுமானால், வேண்டாத அக்கருத்துக்கள் நீக்கப்பட்டு, நாமக்கல்லாரே கூறுவது போன்று, விஞ்ஞான அறிவு-அரசியல் நுணுக்கம்-போர்வீரம்-படைச் செருக்கு-சுகபோக சாதனங்கள் பற்றிய கருத்துக்கள் இசைப்பாட்டுகளில் இடம் பெறவேண்டும். 'தெய்வ நம்பிக்கையும், கர்மபலன்களை ஆராய்ச்சியும், பிறப்பின் விசாரணையும்'' ஆகிய இவை, பாட்டின் பொருள்களாக இருக்கவேண்டும் என்று கூறுகிறார் நாமக்கல்லார்; புரட்சிக் கவிஞர் பாரதிதாசனோ, 'மாடுகளும் பழக்கத்தால் செக்கைச் சுற்றும் மடையர்களும் வெற்றிடுவார் கடவுட் பால்'' என்று பட்டென்று கூறியுள்ளார். தெய்வ நம்பிக்கை மனித வாழ்வுக்கு இடர் விளைவிக்குமே யல்லாது, பயன் ஏதும் விளைவிப்பதில்லை. ஆகவே, தெய்வ நம்பிக்கை பாடல்களிலே இடம் பெறவேண்டிய தேவையில்லை; பாடல்களில் பகுத்தறிவு மணம் கமழ்ந்தால் போதும்; அதுதான் வாழ்வளிக்கக்கூடியது. எனவேதான் கூறுகிறோம், தமிழிசை காலத்திற்கும் கருத்துக்கும் ஏற்றவகையிலும், கல்வி புகட்டும் நிலையிலும், வாழ்வளிக்கும் முறையிலும் அமைய வேண்டுமானால், தமிழிசையில் பகுத்தறிவு மணம் கமழவேண்டும் என்று அஃதில்லாதவரையில், நாமக்கல்லார் கூறுகின்ற எடுத்துக்காட்டுக்கொப்ப, தமிழிசை 'கறி சமைக்க உதவாத காய்போலத்தான்!'' தமிழிசை வாணர்கள் இனியேனும் பகுத்தறிவுக்கொத்த பாடல்களை அமைத்துப், பாடிக்காட்டி நாட்டிற்கும் மக்களுக்கும், மதிப்பும், உயர்வும், பலனும் அளிக்க முன்வரவேண்டும். பகுத்தறிவுக் கருத்துக்கள் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன், உடுமலை நாராயணக்கவி போன்றவர்களின் பாடல்களிலே நிரம்பப் பொதிந்துகிடக்கின்றன. அத்தகைய கலைச் செல்வங்களைத் தமிழிசை வாணர்கள் இசை அரங்குகளில் கொண்டுவந்து நிறுத்தி, மக்கள் மனதை மகிழச் செய்வதோடு மட்டுமல்லாமல், அதனை மறுமலர்ச்சி பெறவும் செய்யவேண்டும்! பகுத்தறிவுப் பாடல்களை இயற்றவும், இசைக்கவும் மற்றவர்களுக்கும் அது ஒரு தூண்டுகோலாகவும் இருக்கும். தமிழிசை விழா நடத்துவோர் இதனைச் செய்ய முனவந்தால்தான், அவர்கள் கடமையைச் செய்தவர்களாக வருங்காலத்தவரால் கருதப் படுவார்கள்!

பாடல்களிலேபுதுப்பாங்கும், புதுக்கருத்தும், பலபொருளின் நல்ல அழகும், உயர்வும் இந்த நாடு பெறவேண்டுமேயின், உள்ளத்திருந்து பகுத்தறிவு ஊற்றுக்கள் உவப்பெடுக்கவிடும் கவிஞர்கள் தோன்ற வேண்டும்! அந்த ஊற்றுக்களை இசை வாணர்கள் நாட்டில் பரப்ப வேண்டும்! அவர்களுக்குத் தமிழிசை இயக்கத்தார் வழி வகுக்க வேண்டும்! பகுத்தறிவு மணங்கமழும் தமிழிசை வெள்ளத்தில் தமிழ்மக்கள், நீந்தி, விளையாடி, திளைத்தெழுந்து அன்புற்று வாழவேண்டும்! இதுவே நமது ஆவல்!

இந்தோனேஷியக் குடியரசு அங்கீகாரம்

லண்டன், டிச. 25—

செவ்வாய்க்கிழமை ஏற்படவிருக்கும் இந்தோனேஷ்யக்குடியரசைபிரிட்டிஷ் சர்க்கார் உடனே அங்கீகரிக்கும் என்று தெரிகிறது. அங்கீகரிப்பதற்கான கோரிக்கையை லண்டனிலுள்ள டச்சு அரசுப்பிரதிநிதி பிரிட்டிஷ் சர்க்காரிடம் ஏற்கனவே தெரிவித்துக்கொண்டிருப்பதாகத் தெரிகிறது.

இந்தோனேஷ்ய குடியரசு தின வைபவத்தில் பிரிட்டிஷ் பிரதிநிதிகள் கலந்துகொள்வார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக் குழுக் கூட்டம்

தி. மு. கழகப் பொதுக் குழுக் கூட்டம், 31—12—49 இரவு 8-மணிக்கு, திருச்சி, கருணாநிதி பார்க் கட்டிடத்தில் நடைபெறும். பொதுக் குழு உறுப்பினர்கள் வரக்கோருகிறேன்.

அண்ணாத்துரை,

பொதுச் செயலாளர் தி. மு. கழகம்.

அறிவுக் கதிர்!

அரசாங்கம் சமுதாயத்தின் மீது அதிகாரம் செலுத்துவதற்கு நியாயமென்ன? தனக்கும் சமுதாயத்திற்கும் ஓர் ஒப்பந்தம் இருப்பதனாலன்றோ? அரசாங்கம் சமூகத்தின் உரிமையாகும். ஆட்சி செலுத்தும் அரசாங்கம் அச்சமூகத்திற்கு செய்யாத மறுக்க முடியாது. மன்னனின் அதிகாரம் ஜனப்பிரதிநிதிகளின் அதிகாரத்திற்குக் கீழ்ப்பட்டது. ஜனப்பிரதிநிதிகள் தங்களைத் தேர்ந்தெடுக்கும் மக்களைச் சார்ந்துள்ளனர். மன்னன் மக்களின் சுதந்திரங்களைப் பாதுகாக்காமலும், சட்ட நியாயங்களின்படி ஆளாமலும் எதேச்சாதிகாரம் செலுத்தினால், மக்களுக்குப் புரட்சி செய்யும் உரிமையுண்டு. கொடுங்கோலாட்சி தொடர்ந்து நடக்க விட்டுவிடுவதைவிட சிறிது காலம் குழப்பமேற்பட்டாலும் பாதகமில்லை.

—ஒல்பாக்

இன்ஜினீரியங் கல்லூரி பொருட்காட்சி

சென்னை, டிச. 24—

மாவட்டக் கல்வி அதிகாரி தோழர் ஆர். நரசிம்மலு நாயுடுவும், இன்ஜினீரிங் கல்லூரிபொருட்காட்சி விளம்பர அதிகாரி தோழர் நாராயணராவும் பின் வருமாறு தெரிவிக்கின்றனர்:—

ஐந்தாவது என்ஜினீரிங், இரண்டாவது கல்வி பொருட்காட்சி கிண்டி என்ஜினீரிங் கல்லூரியில் டிசம்பர் 29-ஆம் தேதி முதல், ஜனவரி 5-ஆம் தேதிவரை நடைபெறவிருக்கிறது.

சிவில், மெகானிகல், எலெக்டிரிகல் இன்ஜினீரிங் சம்பந்தமான விஷயங்கள் இப்பொருட்காட்சியில் இடம் பெறும். இரண்டு அடி 'காரேஜ்' இவ்வாண்டு ஒரு நூதன அம்சமாகும். பௌதிகம், ரசாயனம், பூதத்துவம் இவை சம்பந்தமான பொருள்களும் காட்சியில் இடம்பெறும்.

கல்வி காட்சி பகுதியில் ஆரம்பக் கல்வி, குழந்தைகளுக்கான கல்வி, தோட்டவேலை, வீட்டுக் கைத் தொழில், முதியோர் கல்வி, ஆதாரக் கல்வி, மராஜா உரிமைப் பயிற்சி வேட்பரம் மூலமும், பார்ப்பதும் மூலம் அறிவூட்டும் கல்வி, சமூகத்துறை கல்வி, சித்திரம், கைவேலை, தேசபக்தி, புத்தகாலய உபயோகம், இதர-புள்ளி விவரங்கள் இவை பற்றி விபரங்கள் எல்லாம் இப்பொருட்காட்சியிலிருந்து தெரிந்துகொள்ள முடியும்.

கல்லூரி நாடகமண்டபத்தில் ஒவ்வொரு மாலையிலும் பள்ளி மாணவர்களால் நாடகங்கள் நடத்தப்படும்.

புகை மூலம் செயற்கை மழை!

டர்பன், டிச. 24—

மேகங்களை மழையாக மாற்ற ஒரு புதுமுறை இங்குள்ள விஞ்ஞான கைத்தொழில் ஆராய்ச்சி கவுன்சில் ஆராய்ச்சியாளர்களால் பரிசோதிக்கப்பட்டு வருகிறது. இப்பொழுது உலர்ந்த பனிக் கட்டிகளை மேகங்களின் மீது தூவுவதன் மூலமே செயற்கை மழை பெய்யும் வழி கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. சில்வர் ஐயோடைட் புகையை மேகங்கள் மீது படச் செய்வதன் மூலமும் மழையை வரவழைக்கும் புதுமுறை இப்பொழுது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

இது எவ்வளவு தூரம் சாத்தியம் என்பதே இப்பொழுது ஆராய்ச்சி செய்யப்பட்டு வருகிறது. இந்தப் புகைமூலம் மேகம் மழைபெய்யும் மேகங்களாக மாறினால், அதை உடனே படம் பிடிக்கவும் ஒரு ராடார் போட்டோ கருவி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

ரசாயன எரு உற்பத்திச்சாலை

இந்தியாவில் நிறுவ ஏற்பாடுகள்

லண்டன், டிச. 25—

இந்தியாவுக்கு வேண்டிய ரசாயன எருவை அங்கேயே தயாரித்துக்கொள்ள பத்ராவதியில் ஒரு தொழிற்சாலை ஏற்படுத்துவதற்கான ஏற்பாடுகள் எல்லாம் முடிவடைந்து விட்டன. 16 லட்சம் டாலர்கள் விஞ்ஞானச் செலவிடாமல் இதற்கு வேண்டிய இயந்திர சாதனங்களைப் பெறுவதில் மைசூர் பிரதிநிதிகள் வெற்றி பெற்று விட்டார்கள்.

இந்த பத்ராவதி எரு உற்பத்தித் தொழிற்சாலை அமைக்க சொத்த செலவு இரண்டே முக்கால் கோடி ரூபாயாகும் என்று தெரிகிறது. வருஷத்துக்கு 250,0 டன் அமோனியம் ஸல்பேட்டும் 25 00 டன் ஸல்பேட் சத்தும் இன்னும் இரண்டு ஆண்டில் உற்பத்தி செய்ய ஆரம்பிக்கப்படும் என நம்பப்படுகிறது. இந்தத் தொழிற்சாலையை நடத்த கடன் உதவியளிக்கும்படி மைசூர் சர்க்கார் இந்திய சர்க்காரை கேட்டிருப்பதாய் தெரிகிறது.

லெபனானுக்கு விமான நிலையம்

பிரிட்டிஷ், 22—

கால்டே என்ற இடத்தில் ஒரு பெரும் விமான நிலையம் கட்டுவதற்கு 10,000,000 லெபனிஸ் பவுன்களை லெபனான் மந்திரிசபை அனுமதித்திருக்கிறது. —ரூடர்

ஆபாசக் குப்பைகளைத் தடைசெய்யாது அறிவுக் களஞ்சியங்களை அழிப்பதா?

—————:0:—————

மானமிருந்தால் மறுப்பெழுதட்டுமே!

—————(0)—————

தேசியம் தேய்ந்துகொண்டே போகிறதே!

—————:0:—————

'ஒரே உலக' நோக்கம் இதயத்தில் இடம்பெறவில்லையே!

—————:0:—————

தஞ்சையில் நெடுஞ்செழியன்

தஞ்சை, ம.ச. 15—

தஞ்சை திராவிட மாணவர் முன்னேற்றக் கழகத்தின் துவக்க விழா, 11-12-49 ஞாயிறு அன்று, பல்லாயிரக் கணக்கான மக்கள் முன்னிலையில், மிகச் சிறப்பான முறையில் கொண்டாடப்பட்டது.

விழாவில் சொற்பொழிவாற்ற அழைக்கப்பட்டிருந்த தோழர்கள் இரா. நெடுஞ்செழியன், காஞ்சி. கல்யாணசுந்தரம் ஆகிய இருவரும், சென்னையிலிருந்து திருவாரூர் வழியாக, 11-12-49 நண்பகல் வண்டியில் தஞ்சை வந்து சேர்ந்தார்கள். மாணவத் தோழர்களும் பிறரும் வந்திருந்து வரவேற்று, தங்குவதற்கென்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இடத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

மாலை 5 மணி வரையிலும் கழகத் தோழர்களோடு தோழர் இரா. நெடுஞ்செழியன் கழக சம்பந்தமான நடவடிக்கைகள் பற்றி பேசிக்கொண்டிருந்தார். பின்னர் தேனீர் விருந்து அளிக்கப்பட்டது!

கழக உறுப்பினர்கள் மட்டும் அடங்கிய இரகசிய கூட்டம் ஒன்று கீழவாசல் கழகக் கட்டிடத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. தோழர் இரா. நெடுஞ்செழியன் அந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு சுமார் ஒரு மணி நேரம், கழகத்தின் எதிர்கால நிலையைப்பற்றியும், கழகச் செயற் குழு உறுப்பினர்கள் நடந்துகொள்ள வேண்டிய முறை பற்றியும் விரிவாகவும், விளக்கமாகவும் கூறினார்.

பின்னர் அங்கிருந்து நேரே பொதுக் கூட்டத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

தஞ்சை திலகர் மைதானத்தில் சுமார் பதினையாயிரம் மக்கள் கூடியிருக்க திராவிட மாணவர் முன்னேற்றக் கழகத்தின் துவக்க விழாப் பொதுக் கூட்டம் மாலை 6-15க்கு ஆரம்பமாயிற்று.

விழாவிற்கு, மாணவத் தோழர் எஸ். ஆர். சுப்பையா அவர்கள், தலைமை வகித்தார். திராவிட முன்னேற்றக் கழகப் பிரசாரக் குழுச் செயலாளர் தோழர் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ. அவர்கள், துவக்க விழாச் சொற்பொழிவாற்றினார். தோழர் காஞ்சி கல்யாணசுந்தரம் அவர்கள், தற்கால அரசியல், பொருளாதார நிலையை விளக்கி அரிய சொற்பொழிவாற்றினார்.

தோழர் இளங்கோ, விழாவில் கலந்து கொண்டார்.

காஞ்சி. கல்யாணசுந்தரம்

தலைவர் முன்னுரைக்குப் பின் பேசிய தோழர் காஞ்சி கல்யாணசுந்தரம், திராவிட மாணவர் முன்னேற்றக்கழகம் நாட்டிற்கு எந்த வகையில் தேவையானது என்பது பற்றியும், பொருளாதார நிலை குறித்தும், 'தலைவர்களை, தொழும் வழக்கை, (Hero worship) வன்மையாகக் கண்டித்தும் அரியதொரு சொற்பொழிவாற்றினார்.

இரா. நெடுஞ்செழியன்

பிறகு, தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் பேசியதின் சுருக்கம் வருமாறு:—

அவைத் தலைவர் அவர்களே! அன்புகெழுமிய மாணவத் தோழர்களே!! மதிப்பிற்குரிய நண்பர்களே!!! தஞ்சை, திராவிட மாணவர் முன்னேற்றக் கழகத்தின் துவக்கவிழாவினையொட்டி, இம்மாபெருங் கூட்டம் கூட்டப்பட்டிருக்கிறதென்பதை, அழைப்பிதழ் மூலமாகவும், எனக்கு முன் பேசிய தோழர்கள் மூலமாகவும் நன்குணர்வீர்களென நம்புகிறேன். தி. மா. மு. கழகத்திற்கும், தி. மு. கழகத்திற்கும் கொள்கையளவில் வேறுபாடில்லை. அரசியலில் தன்னாட்சி பெற்று, பொருளாதார சுரண்டலிலிருந்து மக்களை விடுவித்து, முதலாளித்துவத்தை ஒழித்து, தேவைக் கேற்றவாறு வசதிகளைப்பெருக்கி, மனிதனை மனிதனாக மதிக்கும் ஜனநாயக ஆட்சி ஏற்பட வேண்டும் என்பதுதான், தி. மு. கழகத்தின் நோக்கம். தி. மு கழகத்தின் கொள்கைகளை அறிந்து தங்கள்கொள்கைகளை அமைத்துக் கொள்ளுவதே, தி. மா. மு. கழகத்தின் கடமையாகும். தி. மு. கழகம் கிளர்ச்சிநடத்தலாம், தூது கோஷ்டி செல்லலாம், அரசியலில் சம்மந்தப்படலாம். ஆனால், தி. மா. மு. கழகம் இத்தகைய, நேரடி நடவடிக்கைகளில் இறங்காது. அரசியலறிவுடையவர்கள் நாட்டில் 1000க்கு ஒருவர் என்ற நிலை இருப்பதால் மக்களுக்கு அறிவூட்டும் வகையில், தி. மா. மு. கழகம் பணிபுரியும். ஆகவேதான் அரசியல் பொருளியல், சமுதாய இயல் பற்றிய கருத்துக்களை மாணவர்கள் அறியட்டும் என்று கருதி, அவைபற்றி இங்கு குறிப்பிடுகிறோம்.

அவகாசம் கிடைப்பின் அங்கும் பணி புரிவோம்

நமது, தமிழ்நாட்டு காங்கிரஸ் தலைவர், ராஷ்டிரபதி காமராஜர், தி. மு. கழகக் கூட்டங்களுக்குச் செல்லாதீர்களென்று பேசி வருகிறார். நாங்கள் அந்தகு போக்கு கொண்டவர்களல்ல. 'எப்பொருள், யார் யார் வாய் கேட்பினும், அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு' என்னும் வள்ளுவர் வழி செல்பவர்கள் நாங்கள்.

மராமத்திலாகா மந்திரி பக்தவத்சலம் இருக்கிறாரே அவர், நமது கூட்டங்களுக்கு மக்கள் பெருமளவு கூடுவது பற்றி குறிப்பிடுகையில், "பைத்தியக்காரன் பின்னாலே கூடத்தான் பத்து பேர் போகிறார்கள்" என்றுபேசியுள்ளார். எங்கள் கூட்டத்திற்கு மக்கள் பல்லாயிரக்கணக்கில் தான் கூடுகின்றனர். அவர்கள் (தேசியத் தோழர்கள்) கூட்டத்திற்குத் தான் பக்தவத்சலம் குறிப்பிட்ட மாதிரியிலே கூட்டம் கூடுகிறது.

கல்வியமைச்சர் மாதவமேனன். 'திராவிட நாடு பிரிவினை கேருபவர்கள் கீழ்ப்பாக்கம் (பைத்தியக்கார) ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட வேண்டியவர்கள்' என்று குறிப்பிட்டாரும். யார்பைத்தியக்காரர்கள்? தோழர் மாதவமேனன், விவசாய பொருட்காட்சியில் பரிசு பெற்ற தூய வெள்ளையும், தூய சருப்பு கலந்த நிறமுள்ள மாடொன்றைப்பார்த்துபரவசமடைந்து, பக்கத்திலிருந்த பழைய கோட்டைப் பட்டக்காரரைப் பார்த்து, இதென்ன பெயிண்டா (Paint) என்று கேட்க, அவரும் பதில் கூறாது, ஒரு வாளியில் தண்ணீரும், துடைக்க துணியும் கொடுத்து 'துடைத்துப் பாருங்கள்' என்று சொன்னாராம். துடைத்துப் பார்த்துவிட்டு, "என்ன அயில் பெயிண்டா" என்று மீண்டும் கேட்டாராம் இந்த மாதவர்தான் இன்று கல்வி மந்திரி! அவர் நம்மைப் பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்படவேண்டியவர்கள் என்கிறார். நாங்கள் அனுப்பப்பட வேண்டியவர்கள் தான், அங்குள்ளோருக்கு தெளிவேற்படுத்த. இப்போது வெளியிலே, உள்ளவர்களுக்கு தெளிவேற்படுத்தி வருகிறோம். அவகாசம் கிடைக்கும்போது, கீழ்ப்பாக்கத்துக்கும் சென்று, அந்த பணி புரிவோம். மந்திரிமாதவமேனனகள், சிகிச்சைக்காக சேர்க்கப்பட வேண்டியவர்களாக இருப்பார்கள் அப்போது.

எது ஜனநாயகம்

காங்கிரஸ் தலைவர்கள் நம்மை வெள்ளைக்காரதாசர்கள் என்று கூறுகின்றனர் வெள்ளையனுக்கு, கைலாகு கொடுத்தும தியாத, எம் போன்ற, வாலிபர்களை, இளைஞர்களைப் பார்த்து தான் கூறுகிறார்கள், பழைய ஜஸ்டிஸ் கட்சி, ராஜ விசுவாசம் எடுத்துக் கொண்டு மந்திரி சபை அமைத்ததாலே இக்குறை கூறப்படுமானால், பண்டித நேரு ராஜ விசுவாசப் பிரமாணம் எடுத்துக்கொண்டாரே அவர் வெள்ளைக்கார தாசரா? ராஜகோபாலாச்சாரி செய்தாரே பிரமாணம், அவரும் வெள்ளைக்கார தாசர் தானே?

பிற ஜனநாயக நாடுகளில் மக்களாலே, மக்களால் மக்கள் நன்மைக்காக அரசாங்கம் உள்ளது. இங்கோ, காங்கிரஸ் கட்சியாலே, காங்கிரஸ்காரர்களால், காங்கிரஸ்காரர்களின் நன்மைக்காகவே அரசாங்கம் இருக்கிறது. இதற்கு ஜனநாயகம் என்று பெயரா? 'ஜனநாயகம்' 'ஜனநாயகம்' என்று கூறிக்கொண்டே, அதற்கு நேர்மாறான முறையில் ஆட்சி நடத்தி வருவது முறையா? இந்த நிலை மாற வேண்டாமா?

மன மாறுதலா, மதிமயக்கமா?

காங்கிரஸ்காரர்கள், எங்களைப் பார்த்து, "இவர்களுக்கென்ன எதையும் எதிர்ப்பது தான் இவர்கள் வேலை" என்று கூறி வருகின்றனர். உண்மையில நாங்கள் அப்படி பட்டவர்களல்ல. மதுவிலக்கை கொண்டுவந்தனர். எங்கள் பூரண ஒத்துழைப்பைத் தந்தோம். நல்ல முறையில் பிரசாரம் செய்தோம். "நல்ல தம்பி" படத்தை விட சிறந்த முறையில் மதுவிலக்கு பிரசாரம் செய்ய முடியுமா? அறிவுடைய சர்க்காராயிருந்தால், அப்படத்தை மக்கள் இலவசமாகப் பார்க்க வழி வகை செய்திருக்காதா? இப்போது, 500 ரூபாய்க்கு பர்மிட் தருமளவுக்குப் பின் வாங்கியுள்ளனர். இதனை எதிர்க்கிறோம் நாங்கள். பட்டாளத்தார் மது வருந்த அனுமதிக்கப்படுவார்களாம்! என்ன விந்தை! பொது மக்களுக்கு மட்டும் ஏன் பின்னர் தடை?

ஜமீன்தாரிஒழிப்பு மசோதா கொண்டு வந்தீர்கள் வரவேற்றோம்? அத்துடன் இறுமையும், சிதம்பரம் தில்லையப்பனின் பொன் ஓட்டையும், மதுரை மீனாக்ஷியின் மூக்குத்தியும், வெங்கடேஸ்வரரின் வைர முடியையும் ஒழிக்கவில்லையே என்றுதான் கேட்கிறோம்!

காங்கிரசை, மிகமிகக்கடுமையான முறையில் தாக்கி, எழுதியும் பேசியும் வந்த, டாக்டர் அம்பேத்கார் இன்று சட்ட மந்திரியாக, அரசியல் நிர்ணயக் குழுவின் தலைவராகவும் ஆக்கியுள்ளார்கள். மேலும் காங்கிரசாரல்லாத வேறு பலருக்கும், பெரும் பதவிகள், காட்டில் காங்கிரஸ்காரர் அல்லவே? ஜான் மத்தாய் 4 அணா மெம்பராக காங்கிரசில் இன்று வரை ஆகவில்லையே? முன்னாள் நிதி அமைச்சர் ஷண்முகம் யார்? காங்கிரஸ்காரரா? அல்லவே! ஏன் இவர்களுக்குப் பெரும் பெரும் பதவிகள் தரப்பட்டன? உங்களிடம் அறிவுப் பஞ்சமா? இதைக் கேட்டால் நாங்கள் குற்றவாளிகளா? 'தாசர்'கள் என்று தெரிந்தும் ஏன் கொடுத்தீர்கள்? எப்படிக் கொடுத்தீர்கள்? மன மாறுதலா? அல்லது மதி மயக்கமா?

இப்பொழுது, தி. மு. கழகக் கூட்டங்களுக்கு 144 போட்டு தடையிட, அதையும் மீறினால் கண்ணீர்ப் புகைப் பிரயோகம், புத்தகங்களுக்குத் தடை, அண்ணாவின் 'ஆரிய மாயை'க்குத் தடை, அதை எழுதியதற்காக அவர் மீது வழக்கு, இலக்கிய வரலாறுக்குத்தடை, இராவண காவியத்திற்குத் தடை 15 ஆண்டுகளுக்கு முன் எழுதப்பட்ட, பாரதிதாசனின் இரணியனுக்குத் தடை. இவற்றிலே என்ன குறை கண்டது அரசாங்கம்? இன்ன குற்றமுள்ளது என்று யாராலவது கூற முடியுமா? ஊளாயினி போன்ற கதைகளுக்குத் தடை போட முடியாத சர்க்கார், எந்த நியாயத்தைக்கொண்டு எங்கள் புத்தகங்களுக்குத் தடை போடுகிறது. மானமிருந்தால் மறுப்பெழுதட்டுமே?

தேசியம் தேய்கிறதே!

நாம குறுகியமனப்பான்மையுடையவர்களாம்! அவர்கள் தான் என்ன பரந்த மனப்பான்மையுடையவர்கள் என்று கேட்கிறேன். அவர்கள் தேசியம் வர வரக் குறைந்துகொண்டே வருகிறதே! முன்னர் அவர்கள் தேசியத்தில் பர்மாவும், பாகிஸ்தானும் சேர்ந்திருந்தது. இன்று, அவை பிரிந்துவிட்டன. அவர்களின் தேசியமும் குறுகிவிட்டதே. அவர்களுக்கும் 'ஒரே உலகம்' என்ற பரந்த மனப்பான்மை இன்னும் வரவில்லையே! அவர்கள் தேசியத்தின் பரந்த தன்மை, இந்தியாவின் எல்லை அளவே தானே நிற்கிறது? எங்கள் தேசியம் விந்தியமலையளவி[...] இதிலென்ன நாங்கள் குறுகி[...] மனப்பான்மையுடையவர்கள[...] அவர்கள் பரந்தமன[...]ப்பான்மை யுடையவர்களென்[...] கேட்கிறேன்:

கோயமுத்தூர் சி. சு[...]ப்பையா அவர்கள் ஒரு பொ[...] கூட்டத்தில் பேசுகிறார், 'ந[...] தான் ஈ. வெ. ரா.-வை, உ[...] மலை வழக்கில் விடுதலை செ[...]யச் சொன்னேன் என்று[...] எப்படி யிருக்கிறது நிர்வாக[...] பார்த்தீர்களா? இன்று சி. [...] சுப்பையா சொன்னார் எ[...] பதற்காக பெரியார் விடுத[...] செய்யப்பட்டாராம், நாளை[...] வேறு ஏதாவது சொல்வா[...] மந்திரிகள் கேட்பார் என[...] தானே பொருள்? இதற்கு[...] பெயர் ஜனநாயகமா?

தேசியத் தோழர்கள், மாண[...]வர்கள் திராவிடர் இயக்கத்தில் சம்பந்தம் கொள்ள கூடாது என்று கூறு[...]கின்றனர். நாங்கள் மாண[...]வர்களை இயகக நடவடிக்கை[...]களில் ஈடுபடச் சொல்ல[...]வில்லையே! அதற்கு மாறு[...] காங்கிரஸ்காரர்கள்தானே மாணவர்களை, கிஷ[...] இயக்கத்தில் சேரச்செய்தனர்[...]

பெருத்த பணக்காரர்களா[...]யிருந்தும், காங்கிரஸ்காரர்[...]கள், தியாகிகள் என்ற[...]ால் நிலம் பெறுகின்றனர்[...] ஏழைகளுக்கு வழங்க[...] கூடாதா அரசாங்கம்!

பின்னர் மக்களின் நேரமு[...] தினைபும்—உழைப்பும்—அறி[...]வும்—ஆற்றலும் இந்நாட்டில் எப்படி எப்படியெல்லாம்பாழ்[...] படுத்தப்படுகின்றன என்பது[...] பற்றியும், வீண் செலவுகளைத[...] தடுத்து கல்விக்கும், வைத்தி[...]யத்துக்கும், சுகாதாரத்துக்கும்[...]

(தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க.)

யூகோஸ்லாவியாவைத் தாக்கினால் உலக எதிர்ப்பைச் சமாளிக்க நேரிடும்!

அநீதிக்குப் போராடி அழிய வேண்டாம்!

—————: (0) :—————

ரஷ்யாவுக்கு யூகோ ராணுவத் தளபதி எச்சரிக்கை!

"யூகோஸ்லாவியாவை உலகின் மற்ற பாகங்களிலிருந்து பிரித்து வைக்க சோவியத் யூனியன் செய்யும் முயற்சி பலிக்கவில்லை. நம்மை யார் தாக்கினாலும், மூர்க்கத்தனமான எதிர்ப்புகளைச் சமாளிக்க நமது படைகள் சிறந்த உக்கிரவாதமாக இருக்கிறது. இதனால் நம் நாட்டின் மீது தாக்குதல் ஏற்படாது என்பதல்ல பொருள். நமது படைகள் எத்தகைய ஆபத்தையும் சமாளிக்கத் தயாராக இருக்கவேண்டும். மேன்மேலும் சிக்கலாகிக் கொண்டிருக்கும் இந்தத் தகராறைப் போக்க கமின் பாரம் ஆவலாக இருக்கிறது. யூகோஸ்லாவியாவை ரஷியா தாக்கினால் உலகம் முழுவதும் அந்த நடவடிக்கை கண்டிக்கப்படும். அது பெரிய யத்தமாக மாறிவிடும். ரஷியா அக்கிரமக் கட்சிக்காகப் போராடும் நாடாகிவிடும்."

என்று யூகோ ராணுவத் தலைவர்களில் ஒருவரான லெப். ஜெனரல் மிலஸாவூர் அண்மையில் பேசியிருக்கிறார். ரஷியாவுக்கும் யூகோவுக்குமிடையே கடந்த ... முதல் தகராறு ... வருவதை வாசகர்கள் அறிவர். ரஷியா எப்படி ஒரு கம்யூனிஸ்டு நாடாகத் திகழ்கிறதோ அப்படியே யூகோவும் ஒரு கம்யூனிஸ்ட் நாடாகத் திகழ்ந்து வருகிறது. அதுபோலவே ரஷியத் தலைவர் ஸ்டாலினைப்போலவே யூகோ தலைவர் டிட்டோவும் ஒரு கம்யூனிஸ்டே.

இங்ஙனம் ஒரே கொள்கையை உடைய இவ்விரு நாடுகளுக்கிடையே பலமான மோதுதல் ஏற்பட்டிருப்பது வருந்தத்தக்கதே. இத்தகைய மோதுதலுக்குக் காரணமென்ன என்பதை ஆராய்ந்து பார்க்கையில் இது போராட்டம் ஜனநாயகத்துக்கும் சர்வாதிகாரத்துக்குமிடையே ஏற்பட்டுள்ளதொரு போராட்டமென்றே சொல்ல வேண்டும்.

ரஷியா தனது கொள்கையான கம்யூனிஸத்தைப் பரப்புவதோடு மாத்திரம் நிற்கவில்லை. ஒரு நாட்டில் கம்யூனிஸம் புகுந்து, நிலைக்க ஆரம்பித்துவிட்டால் அத்துடன் அந்நாட்டு அல்லல் தீர்ந்தது என்று சொல்லுவதற்கில்லை. கம்யூனிஸம் என்னும் உயர்ந்த கொள்கையைக் கடைபிடிக்கும் காரணத்தால் அந்நாடு ரஷியாவுக்கு அடிபணிந்தாகவேண்டும். இன்றேல் அந்நாடு கம்யூனிஸ்டு நாடாகவும், அதன் தலைவர் கம்யூனிஸ்டாகவும் கருதப்படுவதில்லை. இதுதான் ரஷியாவின் இன்றைய பதேச்சாதிகாரப் போக்காக இருந்துவருகிறது.

இதே தொல்லைதான் இன்றையதினம் யூகோவைப் ப...றிக் கொண்டிருக்கிறது யூகோ தலைவர் தோழர் டிட்டோ ஜனநாயகத்தில் அதிக நாட்டமுடையவராகத் திகழ்கிறார். கம்யூனிஸத்தை ஜனநாயகத்தோடு கலந்து வழங்கவேண்டும் என்பது அவரது போக்கு. ஆனால் இதற்கு தோழர் ஸ்டாலின் இடம் கொடுக்க மறுக்கிறார். ரஷிய பதேச்சாதிகாரத்தின் கீழ் யூகோ இருக்க வேண்டுமென்கிறார். இதற்கு டிட்டோ இணங்க மறுக்கிறார். எனவே தகராறு வளர்கிறது. ரஷியா தனது சக்தியெல்லாம் பயன்படுத்தி யூகோவை மட்டந்தட்டப் பார்க்கிறது இதைத்தான் யூகோ ராணுவத் தளபதி சுட்டிக்காட்டி ரஷியாவை எச்சரிக்கிறார்.

யூகோ தளபதியின் எச்சரிக்கை நல்ல கருத்தை உள்ளடக்கியுள்ளது. 'யூகோஸ்லாவியாவை ரஷியா தாக்கினால் ரஷியாவின் நடவடிக்கையை உலகம் கண்டிக்கும் பின்னர் அத்தகைய கண்டனமே பெரியதொரு யுத்தமாகமாறக் கூடும்" என்று அவர் கூறியிருப்பது கவனிக்கத்தக்கது.

கம்யூனிசம் எவ்வளவுதான் உயர்ந்த கொள்கையாக இருந்தபோதிலும், அதனைப் பயன்படுத்தும் முறை தெரிந்து பயன்படுத்தாவிடில் அதனால் தீமையே விளையும் என்பதை நினைவில் வைக்க வேண்டும். ரஷியா அத்தகைய ஒரு நிலைமை பக்கம் பார்வையைத் தான் தனது கொள்கையைக் கொண்டு செல்கிறது. சர்வாதிகாரத்தால்தான் கம்யூனிஸத்தைப் பரப்ப இயலும் என்பது தோழர் ஸ்டாலினின் எண்ணமாயிருக்குமானால் போதும். ஆனால் வருங்கால அந்த எண்ணத்துக்கு இடந்தராது என்பது திண்ணம். அதற்கு இன்றைய யூகோஸ்லாவியாவே சிறந்ததோர் எடுத்துக்காட்டாக அமையும். ஐரோப்பாவில் மற்ற கம்யூனிஸ்டு நாடுகள் யூகோவாகவும், அவற்றின் தலைவர்கள் டிட்டோக்களாகவும் மாறினால் அதுகண்டு யாரும் ஆச்சரியப்படத்தேவையில்லை.

முதலாளித்வம் முறியடிக்கப்பட வேண்டும் என்ற கொள்கையை, உலகம் ஒப்புக்கொள்ள ஆரம்பித்துவிட்டது. ஆகவே, முதலாளித்வத்தை முறியடிக்கும் பணியில் சர்வாதிகாரம் கலந்துதான் இருக்கவேண்டும் என்ற அவசியமில்லை. ஒருக்கால் இடைக்காலத்தில் சர்வாதிகாரத்துக்கு ஆதரவும் அவசியமும் இருந்திருக்கலாம் ஆனால் எதிர்காலம் நிச்சயமாக சர்வாதிகாரத்தை ஏற்றுக்கொள்ளாது.

எனவே, வீணே பதேச்சாதிகாரத்துக்கு இடந்தந்து, அதன் காரணமாக ... என்னும் புனிதமான கொள்கைக்கு இழுக்குத் தேடாதிருக்க வேண்டுவது ரஷியாவின் இன்றியமையாக் கடமையாகும். அ... யூகோ ராணுவ தளபதி தோழர் மிலஸாவூரின் எச்சரிக்கை தக்க வழி காட்டியாக அமையட்டும்.

ஆபாசக் குப்பை...

[3-ம் பக்கத்தொடர்ச்சி]

செலவழித்தால், இந்த நாடு வறுமை நீங்கி, பிணி நீங்கி, நல்வாழ்வு வாழ வசதி ஏற்படும் என்றும், அரசாங்கம் தீட்டும் திட்டங்களெல்லாம் முதலாளிகளுக்கும்—பணக்காரர்களுக்கும் சாதகமாக இருக்கின்றனவேயன்றி; ஏழை எளியவர்களுக்கு வாழ்வளிப்பதாக இல்லை என்றும் விவசாயிகளிடம் அரசாங்கம் கட்டாயக் கடன் கேட்பது எந்த வகையிலும் சரியாகாதென்றும், வீண் திட்டங்களில் பணம் செலவழிப்பதை அரசாங்கம் நிறுத்துமேயானால் கட்டாயக் கடன் வாங்க வேண்டிய அவசியமே ஏற்பட்டிருக்காது என்றும், மற்றும் தற்கால அரசியல் நிலையைப் பற்றியும் சுமார் 2 மணி நேரம் அரிய சொற்பொழி வாற்றினார். செயலாளர் நன்றிகூறக் கூட்டம் இனிது முடிந்தது.

மாணவர் கழகச் செயலாளர் அவர்கள் இல்லத்தில் சொற்பொழிவாளர்களுக்கு இரவு விருந்து அளிக்கப்பட்டது. இரவு மெயிலில் தோழர்கள் இரா. நெடுஞ்செழியன், காஞ்சி. கல்யாணசுந்தரம் இருவரும் சென்னைக்குப் புறப்பட்டனர், மாணவர்கள் வழியனுப்பி வைத்தனர். (வி-உ)

உப்புதேறு ஆற்றங்கரையின் மீது பாலம்

சென்னை, டிச 23—

சென்னை மராமத்து இலாகா மந்திரி தோழர் எம். பக்தவத்சலம் டிசம்பர் 26-ந் தேதியன்று மூன்று மணிக்கு மேற்கு கோதாவரி ஜில்லாவிற்கும் கிருஷ்ணா ஜில்லாவிற்கும் இடையே ஓடும் உப்புதேறு ஆற்றின் மீது பாலம் கட்டுவதற்கு அஸ்திவாரக்கல்லை நாட்டுவார்.

இப்பாலம் கட்டுவதற்கு சுமார் $3\frac{1}{2}$ லட்சம் ரூபாய் பிடிக்குமென்றும், இந்த இரு ஜில்லாக்களுக்குமிடையே ரோட்டு போக்குவரத்து இதனால் ஏற்படும் என்று கூறப்படுகிறது

சென்னை சர்க்காரின் சூபரின்டென்டிங் எஞ்ஜினியர் விழாவில் கலந்துகொள்வார்.

———

உழவர்கள் மீது கலெக்டர்கள் நடவடிக்கை

சென்னை, டிச. 23

தானியக் கையிருப்பு பற்றிய தகவல்களை அளிக்கவில்லை என்பதற்காக மட்டும் விவசாயிகள்மீது வழக்கு தொடர்வது சரியல்ல என்று சர்க்கார், ஜில்லாவிலுள்ள கலெக்டர்களுக்கு சுற்றறிக்கை அனுப்பியிருப்பதாகத் தெரியவருகிறது. அப்படி நடவடிக்கை எடுக்கவேண்டுமானால் அதற்கான பலமான காரணங்கள் இருக்க வேண்டுமென்றும் தெரிவித்திருக்கிறார்கள்.

★ நாட்டு நடப்பு ★

ஐக்கிய வைத்திய சங்கம்

கும்பகோணம், டிச 22—

18-12-49 அன்று மாலை 4—மணிக்கு மேற்படி சங்கத்தின் 3-ம் கூட்டம் குழந்தை டாக்டர் பசுபதி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. எல்லா முறைகளையும் சேர்ந்த உள்ளூர் வெளியூர் வைத்தியர்கள் சுமார் 50 பேருக்கு மேல் கூடி இருந்தனர்.

தலைவரால் கும்பகோணம் பேட்டைத்தெரு வைத்யர், குழந்தைவேலு அவர்களின் மரணத்தைக் குறித்து ஓர் அனுதாபத் தீர்மானமும், இன்னும் சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

குழந்தைகளின் வியாதிகள் என்பது பற்றி ஜெம்மி டாக்டர் பி. வெங்கடாசலம், அவர்களால் பேச அதே விஷயத்தைத் தொடர்ந்து திரும்பூர்வாடி பி. டி. முத்துராம, எல். எல். டிஸ்பென்ஸரி டாக்டர் எ. சக்கரபாணி ராமாநுஜாச்சாரியார் மற்றும் பல வைத்யர்களும் பங்கெடுத்து பேசியது மற்றெல்லா வைத்யர்களுக்கும் உற்சாகமாகவும் பலனளிக்கத்தக்க வகையிலும் இருந்தது.

தலைவர் முடிவுரையில் சங்கத்தின் பலனையும் வைத்தியர்களுக்குள் ஐக்யத்தைப் பற்றியும் விளக்கமாக பேசியபின் செயலாளர் நன்றி கூற கூட்டம் இனிது முடிவுற்றது.

* * *

ஆசிரியர் கழகம்

தொழுதூர், டிச. 20—

விருத்தாசலம் கூற்றம்-தொழுதூர் "ஆசிரியச் சங்கம்" 17-12-49 காலை 10 மணிக்குத் தோழர் எஸ் கிருஷ்ணன் பி. ஏ. பி. டி. அவர்கள் தலைமையில் கூடியது. அன்றைய பேசப்படும் பொருளாக—திருக்குறள் 5-ம் பகுதி "இல்வாழ்க்கையில்" ஐந்து பாக்கள்-எடுத்துக் கொள்ளப்பட்டு தோழர் அ. காசிநாதன் அவர்களால் விளக்கமாக பேசப்பட்டு பின் வள்ளுவ உள்ளம் என்ற விரிவுரை நிகழ்த்தப்பெற்றது.

* * *

மறுமலர்ச்சிக் கழகம்

அருப்புக்கோட்டை, டிச. 20—

18-12-49 மாலை 6 மணிக்கு செங்குந்தர் இளைஞர்கழக கட்டிடத்தில் தோழர் ச. காளிமுத்து அவர்கள் தலைமையில்நடந்த கூட்டத்தில் தோழர் சி. என். அண்ணாதுரை அவர்கள் இந்த ஜனவரி 3-ந் தேதி திராவிட முன்னேற்றக் கழக திறப்புவிழாவிற்கு வருகிறபடியால் அதுபோது அண்ணாதுரை அவர்களுக்கு இம்மறுமலர்ச்சிக் கழகத்திலிருந்து ஒரு வரவேற்பு இதழ் வாசித்துக் கொடுப்பதென ஏகமனதாகத்தீர்மானிக்கப்பட்டது.

* * *

ஆரம்ப ஆசிரியர் கழகம்

சக்கிராயபாளையம், டிச 22—

10-12-49-ல் சக்கிராயப்பாளையம் போர்டு உயர்தர ஆரம்பப்பாடசாலையில் ஆசிரியர் கூட்டம் நடைபெற்றது. அவ்வமயம் சின்ன சேலம் தோழர் கே. ஆர். ராமமூர்த்தி பி. ஏ. பி டி. அவர்கள் தலைமைவகித்தார் இல்லறவியல் என்ற பகுதியில் 8 ஆசிரியர்கள் திருக்குறள் 10 செய்யுள் விமர்சனம் செய்தனர். அடுத்தபடியாக தோழர் ஆர். நடராஜனை தோழர் ரங்கசாமி, ஆகிய இருவரும் முறையே நாட்டிற்கு நன்மைசெய்பவன் வேளியா அல்லது செல்வாளியா என்பதைப் பற்றி வாதங்கள் நடத்தினர். கடைசியாக 1950-ம் ஆண்டிற்கு கழக நிர்வாகஸ்தர்களாக சக்கிராயபாளையம் பள்ளித் தலைமை ஆசிரியர் தோழர் எஸ். கோபால கிருஷ்ணராவ் செயலாளராகவும் ஷை பாடசாலை உதவி ஆசிரியர் கே. இராமையா உதவி செயலாளராகவும் ஷை பாடசாலை உதவி ஆசிரியர் கோபால்சாமி பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு கூட்டம் இனிது முடிந்தது.

* * *

வர்தகத் தொழிலாளர் சங்கம்

திண்டிவனம், டிச. 21—

இவ்வூர் காந்தி சவுக்கில் சங்க தொழில் சங்கத்தார்களின் ஆதரவில் ஒரு மாபெரும் பொதுக் கூட்டம் தலைவர் எம். வெங்கிட...சன் தலைமையில் நடைபெற்றது. அதுபோது சி. இராமகிருஷ்ணன், கே. நந்தகோபால், எ. முருகேசன் ஆகியோர் பேசினார். வேலையிலிருந்து நீக்கப்பட்ட குமஸ்தாக்களை உடனடியாக வேலைக்கு எடுத்துக் கொள்ளவேண்டுமென்றும் ...தற்காலம் உயிர் வாழுவதற்கு போதுமான (35 0-0) ரூபாய் சம்பளம் தரவேண்டுமென்றும் ரேஷனில் பொதுமக்களுக்கு நல்ல அரிசி வழங்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

* * *

சித்த வைத்திய நிலையம் திறப்பு விழா

மேலநீலிதநல்லூர், டிச. 20—

சங்கரயினார் கோவில்வட்டம், மேல நீலிதநல்லூரில் 15-12-49-ல் தோழர் ... அவர்களால் சித்த வைத்திய நிலையம் ஒன்று திறக்கப்பட்டது. ஷை விழாவிற்கு திருநெல்வேலி மாவட்டக் கழக உறுப்பினர் தோழர் எஸ். முத்துக்குமார் அவர்கள் தலைமைவகித்தார்கள். இவ்வைத்திய நிலயத்தின் மானேஜரான தோழர் ஜி. புருஷோத்தமன் அவர்கள் சித்தவைத்தியத்தின் உயர்வைப் பற்றியும், அதை நம் நாட்டில் ஆதரிக்கவேண்டிய அவசியம் பற்றியும் எடுத்துரைத்தார்கள். பின்பு, பலர் பேசினர். இறுதியாக தலைவர் முடிவுரையில் தன்னால் இயன்றவரை இவ்வைத்திய நிலயத்திற்கு உதவி செய்வதாக உறுதி கூறினார்.

* * *

தமிழ் மறுமலர்ச்சி மன்றம்

பொள்ளாச்சி, டிச. 17—

இவ்வூரில் 12-12-49ல் தமிழர் மறுமலர்ச்சி மன்றம் என்ற ஓர் கழகம் அமைக்கப்பட்டது. இக்கழகம் திராவிட முன்னேற்றக் கழகக் கோட்பாடுகளை ஏற்று பணிபுரியும். இதற்குக் கீழ்க்கண்ட செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

தலைவர்:—கோபால், செயலாளர்:—ஆர். எஸ். மாரியப்பன், துணைச் செயலாளர்:—தங்கவேல், பொருள் உறுப்பினர்:—பி. கே. விசுவநாதம், ஏனைய செயற்குழுவினர்:—தண்டபாணி, ச. கந்தசாமி, ஜான்பாட்சா, சர்தார், அப்துல் கபூர், அய்யாசாமி, திருமலைசாமி, சுப்பிரமணியம், தஸ்தகீர், டி. இராமசாமி, இராமசாமி, அப்துல் வகாப். இம்மன்ற உறுப்பினர்களைவரும் தி. மு. கழகத்தில் உறுப்பினராகச் சேர்ந்தார்கள். தோழர் பி. கே. விசுவநாதம் அவர்கள் பொள்ளாச்சியில் ஒரு பிரபல வியாபாரி. காங்கிரஸ் வாதியாக இருந்தவர். அவரும் தி. மு. கழக உறுப்பினராகச் சேர்ந்தார். அவருடைய உறுப்பினர் சீட்டு எண்: 5757 ஆகும்.

பின்பு புலவர் மன்னன், புலவர் ஆறுமுகம் இருவரையும் அழைத்து பொங்கல் விழாவைச் சிறப்புற நடத்துவதென முடிவு செய்யப்பட்டு நன்றிகூறலுடன் கூட்டம் முடிவுற்றது. (செ-ர்)

சந்தாதாரர்களுக்கு

தாங்கள் எழுதும் கடிதங்களில் அனுப்பும் மணியார்டர்களில் தங்கள் சந்தா எண்ணைக் குறித்து அனுப்பவேண்டிக் கொள்ளப்படுகிறார்கள்.

மானேஜர் 'மாலைமணி'

திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டங்கள்

27—12—49

கீழப்பாவூர் :— இரா. சு. தங்கப்பழம், எம். எஸ். சிவசாமி.

28—12—49

பனையடிப்பட்டி :— இரா. சு. தங்கப்பழம், எம். எஸ் சிவசாமி

29—12—49

ஆவுடையனூர் :— இரா. சு. தங்கப்பழம், எம். எஸ். சிவசாமி

இந்தியப் பெருங் கடற்பகுதியின் இன்றியமையாமை

காமன்வெல்த் மாநாட்டில் விவாதிக்கப்படும்

பிரிடோரியா, டிச. 24—

கொழும்பில் நடைபெற இருக்கும் காமன்வெல்த் மாநாட்டில் இந்துமகா சமுத்திர பிரதேசத்தின் முக்கியத்துவம் விவாதிக்கப்படும் என்றும், இவ்விஷயம் தென்னாப்பிரிக்கா சம்பந்தப்பட்டவரையில் மிகவும் முக்கியமானதென்றும் இங்குள்ள அரசியல் வட்டாரங்களில் கூறப்படுகிறது.

இதைப்பற்றி ஜோஹன்ஸ்பர்க் ஸ்டார் கூறியிருப்பதாவது: சிலுவுக்கு அடுத்த படியாக கம்யூனிஸ்டுகள் தங்கள் கைவரிசையை தென்னாப்பிரிக்காவில்தான் காட்டுவார்கள். ஆகவே, இவ்விஷயமாக காமன்வெல்த் நாடுகள் மிக அக்கரைக் காட்டி விவாதிக்க வேண்டியது அவசியமாகும்.

காமன்வெல்த் மாநாட்டில் தென்னாப்பிரிக்காவின் சார்பில் மந்திரி லூவா கலந்துகொள்வார்.

கொலை கொள்ளைகள் பற்றி பத்திரிகைகளுக்குச் செய்திகள்

பம்பாய், டிச 24—

விசாரணையில் இருந்து வரும் குற்றங்கள் சம்பந்தமான தகவல்கள் எதையும் போலீஸ் அதிகாரிகள் பத்திரிகைகளுக்குத் தகவல்கள் கொடுக்கக் கூடாதென்று பம்பாய் சர்க்கார் உத்தரவிட்டிருக்கின்றனர். இனி இச்செய்திகளை எல்லாம் இம்மாதம் முதல் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் போலீஸ் இலாகா மேஷன் பிரசாரன லாகாவே தரும்.

அறிவிப்பு

"மாலை மணி"யில் வெளியிடுவதற்கென அனுப்பப்படும் திருமணம், பிறப்பு, பெயரிடல், பெயர் மாற்றம், நன்றி அறிவிப்பு ஆகியவை பற்றிய செய்திகள் யாவும் விளம்பரங்களாகவே பிரசுரிக்கப்படும். இவைகளுக்கு மட்டும் விளம்பரக் கட்டணம் ஒரு பத்தி, ஒரு அங்குலத்திற்கு ரூ. 2.

(ஆ-ர)

காற்றையுட்கொண்டு நீண்டகாலம் வாழலாம்

லண்டன், டிச 24—

15 ஆண்டு காலம் தண்ணீர் உணவையுட்கொண்டு முழுநலத்துடன் இருக்கும் லண்டனைச் சேர்ந்த திருமதி பார்பாராமூர் பாவலீனா என்ற பெண் 150 வயதிலும் எப்படி இளமையுடன் வாழமுடியும் என்ற புத்தகத்தை எழுதிவருகிறார். அதில் நீண்டகாலம் உடல்நலத்துடன் வாழும் இரகசியங்கள் சிலவற்றை அவர் வெளியிடுவாராம்.

இப்பொழுதுள்ள அவர் அனுசரிக்கும் முறையினாலேயே வெகுகாலம் வாழ முடியும் என்று அவர் நினைக்கிறார். இவருக்கு வயது 45 ஆகிறது, 30க்கு மேல் வயதானவர் எவரேனும் மதிப்பானவர் இல்லையென்றும் தான் உட்கொள்ளும் திரவ ஆகாரத்திலுள்ளது என்று அவர் கூறுகிறார்.

இவர் மலையேறுவதில் நிபுணர், ஒருகாலத்தில் ரஷ்யாவில் மோட்டார் கைசனின் சாம்பியனாகவும் இருந்திருக்கிறார்.

இவர் ரஷ்யாவில் பிறந்தவர். உட்கொள்ளும் உணவினாலேயே தேகம் அழிகிறது என்று நம்பிக்கையுடைய இவர் திரவ உணவைத்தான் உட்கொள்வது என்று கங்கணம் கட்டிக்கொண்டார்!

காற்றை மட்டும் உணவாக உட்கொண்டு வருவதால் நிரந்தரமாக ஆரோக்கியமாக உயிருடன் இருக்கமுடியுமென்று இவர் நம்புகிறார். இதற்கு ஆராய்ச்சிகளையும் இவர் செய்து வருகிறார்.

பழரசங்கள் மூலிகைச்சாறு இவைகளைத்தான் உபயோகித்து வருவதாகவும், தனக்கு பசியே எடுப்பதில்லை என்றும் எப்பொழுது வேண்டுமோ அப்பொழுது பழரசங்களை குடிப்பதாகவும் அதற்கு நேரம் என்று தனியாக வைத்துக்கொள்வதில்லை என்றும் தன் தேகத்திற்கு வேண்டிய போஷாக்கு காற்றிலிருந்தும் சூரிய கிரணங்களிலிருந்தும் கிடைப்பதாகவும் கூறுகிறார்.

திறந்த வெளியில் சுற்றுப்புறத்தில் வசிப்பதால் நோய்க்கு அடிமையாகாமல் இருக்கலாம் என்றும், இதில் தான் வெற்றி கண்டுவிட்டதாகவும் கூறுகிறார். இவருடைய தேகம் உபயோகப்படுத்தாததால் அதில் ஸ்தூலமான அதிகாரிகளின் ஏற்ற முறையினால் காணப்படுகிறது. இவருடைய கணவர் தன் மனைவியின் இவ்வழியை அனுசரிக்க முடியவில்லை. — ரூனேப்

லண்டன், டிச. 25—

பிரிட்டனில் செய்யப்படும் சாபின் குறைத்து வருகிறது என்றும், அடுத்த வருஷம் இது குறைந்துவிடும் என்றும் புராணத்துடன் பேரில் இது விஷயமாகவும் சட்டம் எப்படி காரியத்தில் தயாரிப்பது என்பது பற்றியும் விவாதிக்க ஒரு மார்ச் கூட்டப்பட்டிருக்கிறது.

தி. மு. க. பொதுக் கூட்டம்

பழனி

பழனி, டிச. 23—

இவ்வூர் பாசறை திராவிட முன்னேற்றக் கழக நகர (உட்) கிளையின் துவக்க விழா 21-12-49-ந் தேதி இரவு 9 மணி சுமாருக்கு (ஆசிரி) கிராமிடர் தெரு மைதானத்தில் சிறப்புற நடைபெற்றது. அதுபோது தோழர் ரா. ராதா அவர்கள் சபைக்கு தோழர் முருகன் பிரேரேபிக்கவும், தோழர் கவிமுத்து ஆதரிக்க, தோழர் ராராதா தலைமை வகித்தார். ஆரம்பத்தில் தோழர் அ. தமிழரசன் கட்டப்பன் இசைத்தபின், தலைவர் தன் முன்னுரையில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் வளர்ச்சிபற்றி சிறிது நேரம் பேசினார்.

அடுத்து தோழர் கே. ராமலிங்கம் அவர்கள், தலைவரின் பொருந்தா மனத்தைக் கண்டித்தும், கழகத்தே மக்கள் அனைவரும் அமைப்பைக் கைகொள்ள வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.

அடுத்து தோழர் முருகன் அவர்கள் 'கழகத் தோழர்கள் கட்டுப்பாட்டுடனும், ஐக்கியத்துடனும் நடந்து கழகத்தின் மேன்மையைக் காப்பாற்றுமாறு கூறினார்.

அடுத்து தோழர் அ. தமிழரசு அவர்கள், திராவிட முன்னேற்றக் கழகம் தோன்றிய காரணமும் அவசியமும் பற்றியும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் முக்கிய வேலைத்திட்டம் பற்றியும், சடங்குகளை வைதிகமும், புராணமும் எந்த முறையில் இழிவு படுத்தியிருக்கிறதென்றும் விளக்கிப் பேசினார். அடுத்து தோழர் கா. வெங்கடாசலம் அவர்கள், நகர் திராவிட முன்னேற்றக் கழகத்தின் எதிர்கால வேலைத் திட்டம் பற்றியும், திராவிடநாடு பிரிவினையின் அவசியம் பற்றியும் வலியுறுத்தினார். இவர் முடிவுரைக்குப் பின், தோழர் முருகன் நன்றி கூற, கூட்டம் இரவு 11-மணிக்கு இனிது முடிவுற்றது. (கி-உ)

ஏஜெண்டுகள் தேவை

கீழ்க்கண்ட ஊர்களுக்கு 'மாலை மணி' விற்பனைசெய்ய முன்பணம் கட்டக்கூடிய ஏஜெண்டுகள் தேவை :—

சீயாழி
அம்பாசமுத்திரம்
திருமலைராயன்பட்டினம்,
பவலாவரம்,
சிருத்தாநெல்லூர்,
சங்கரன்கோயில்
(மையனூர்)
மங்கநல்லூர்
மழசாபுரம்
விளாத்திகுளம்
சேந்தமங்கலம்
ஓமலூர்
தனுஷ்கோடி
ஆம்பூர் (மதுரை)
சத்தியவேடு
பாபநாடு
நாகலாபுரம்

கிர்வாகி : "மாலை மணி"
சென்னை.

விருதுநகரில்

★ சந்திரமோகன் ★

நாடகம்

டிசம்பர் 27, செவ்வாய்க்கிழமை கடைசி

தோழர் கே. கே. நீலமேகம்

தலைமைவகிப்பார்

மக்களின் சௌகரியத்தை முன்னிட்டு, செவ்வாய்க்கிழமை காலையிலிருந்தே, தெப்பக் குளத் பக்கம் உள்ள "எவரெஸ்ட்" சுருட்டுக் கம்பெனியில் டிக்கட்டுகள் விற்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. நாடகம் சரியாக 9-30 மணிக்கு "சென்ட்ரல்" சினிமாவில் ஆரம்பமாகும்.

நாடக வசூல் பூராவும், மத்திய திராவிட முன்னேற்றக் கழக நிதிக்குச் சேர்வதால், ஆர்வமுள்ள தோழர்கள் அனைவரும் வந்து ஆதரவு தர வேண்டுகிறோம்.

டிக்கட் வரியுள்பட:—ரூ. 5, 3, 2.

திராவிட முன்னேற்றக் கழகம்.
விருதுநகர்.

ஐ. நா.வின் அடுத்த காரியதரிசி?

லேக்ஸக்ஸஸ், டிச 25—

1951 பிப்ரவரியுடன் முடிவடையும் தன் பதவிக்கு மீண்டும் ஐ. நா காரியதரிசி ஜெனரல் டிரிக்வேலி தேர்தலுக்கு நிற்கப் போவதில்லை என்பதை அறிவித்துவிடுவார் என்று, இங்குள்ள வட்டாரங்களில் கூறப்படுகிறது. அடுத்த காரியதரிசி நியமன விஷயமாக ஐ. நா. பொது சபை செப்டம்பர் 19-ல் ஆலோசிக்கவிருக்கிறது. இதற்கு பாதுகாப்புச் சபை சிபாரிசு செய்தாக வேண்டும். இது விடோவுக்குட்பட்டதால் தேர்ந்தெடுக்கப்படுவோர், நேசநாடுகளுக்கும் ரஷ்யாவுக்கும் இஷ்டமானவர்களாக இருக்க வேண்டும். இப்பொழுதுள்ள கிழக்கு—மேற்கு தகராறில் இவ்விஷயம் சமரசமாகத் தீர்க்கப்படுவது சந்தேகமே. அப்படியானால் டிரிக்வேலியே இன்னும் சிலகாலம் இப்பதவியை வகித்துவரும்படி கேட்டுக்கொள்ளப்படலாம்.

யு. எஸ். உதவி எப்போது?

லண்டன், டிச. 25—

புது இந்தோனேஷியாவில் பரிபூரண அமைதி நிலைகொண்டால் தான், யுனைடெட் ஸ்டேட்ஸின் உதவியை அது எதிர்பார்க்க முடியும் என்று வைலன்ஷியல் டைம்ஸ் ஆம்ஸ்டர்டாம் நிருபர் கூறுகிறார். புது இந்தோனேஷியாவின் தலைவர்கள் மீது மகத்தான பொறுப்பு சுமத்தப்பட்டிருக்கிறதென்றும் இந்தோனேஷியாவின் வர்த்தகம் பெருகவேண்டுமே என்கிற அவசியத்தை அவர்கள் உணர்ந்திருக்கிறார்கள் என்றும் அவர் கூறுகிறார்.

குரோஷி காலமானார்

லண்டன், டிச. 25—

டெல்லி முஸ்லிம் லீக் தலைவரும் பிரிசைக்கார லண்டன் வந்தவருமான டாக்டர் குரோஷி மரணமடைந்தார். ...இவர் மனைவி இதைக்கூட தெரியாமல் முன்னமேதான் பாகிஸ்தானுக்கு விமான மூலம் பிரயாணமானார். —ரூனேப்

டாலரை மிச்சப்படுத்தும் நடவடிக்கை

நியூயார்க், டிச. 25—

அமெரிக்காவிலிருந்து எண்ணெயை இறக்குமதிசெய்யாமல் இருப்பதென இந்தியாவும் இதர ஸ்டர்லிங் நாடுகளும் பிரிட்டனைப் பின்பற்றும் என்று அமெரிக்காவின் 'ஜர்னல் ஆப் காமர்ஸ்' என்ற பத்திரிகை குறிப்பிட்டிருக்கிறது.

மாஹ்ரினில் அமெரிக்க கம்பெனிகளால் உற்பத்தி செய்யப்படும் எண்ணெயை வாங்குவதில்லை என்று இந்தியாவும், ஏற்கனவே முடிவுசெய்துவிட்டதென்றும் அப்பத்திரிகை கூறுகிறது. பிரிட்டிஷ் உதாரணத்தை ஆஸ்திரேலியாவும் பின்பற்றும் என்றும் தெரிகிறது.

பால்கன் நாடுகள் வளர்ச்சி பற்றி ரஷ்யா அக்கரை

லண்டன், டிச 25—

தனக்குட்பட்ட பால்கன் நாடுகளைக் கைத்தொழிலில் சிறந்த நாடாகச் செய்ய, ரஷ்யா முயற்சிக்கிறதென்றும் போர் தலைவர்கள் திருத்தலை இந்த நோக்கம் சதி திட்டமாம் என்றும் கூறப்படுகிறது.

யூகோஸ்லேவியா மார்ஷல் டிட்டோவின் பகைத்துக் கொண்டபோதிலும், மேற்கு உதவி அதிகமாக கிடைக்காததாலும்கூட, யூகோஸ்லேவியா கைத்தொழிலில் முன்னேற்றமடைந்திருக்கிறது என்றும் கூறப்படுகிறது. ரூனேப்

வர்த்தகத்தைப் பெருக்க கனடாவின் தீவிரம்

ஆட்டாவா, டிச. 25—

கொழும்புவில் காமன்வெல்த் மாநாட்டிற்கு வரும் கனடா மந்திரி தன் நாட்டிற்குத் திரும்புகையில் புது டில்லி, கராச்சி, டோக்கியோ ஆகிய இடங்களுக்குச் சென்று தன் வர்த்தகத்தை விருத்தி செய்துகொள்ள வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யும் என்று தெரிகிறது.

நல்லாட்சி புரியுங்கள் . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ரென்றே, இன்றைய தேச பக்தர்கள்' சமாதானங் கூறித் தட்டிக்கொள்ள முடியாது! கிருஷானிக் கூறியுள்ள ஒவ்வொரு அம்சமும் உண்மையும் நியாயமும் ஒன்றி நிற்பதாகும். திட்டமும், லட்சியமும் எதுவுமின்றி, சொந்த ஆலோசனையும் சிறிதுமின்றி, பொறுப்பற்ற முறையில் ஆட்சி யந்திரம் இயக்கப்பெறுகிறதென்பதை நடப்பறிந்தோர் யாரே மறுக்கமுடியுமெனக் கேட்கிறோம். நிர்வாகத் திறமையின்மையாலோ வேறு காரணத்தாலோ ஏதொரு பொருளுக்கு நெருக்கடி வந்துறுவது; சர்க்கார் சட்டமென 'கண்ட்ரோல்' ஆயுதத்தைப் பிரயோகிப்பது; பின்னர், ஏகபோக சுரண்டல் கும்பலின் கூச்சலும், கோபமும் அதிகரித்ததும் அவ்விதித்த கண்ட்ரோலைத் திடீரென ரத்து செய்வது; பின்னர் இரண்டுங்கெட்ட நிலையில் திண்டாடுவது— இவைபோன்ற 'அழும் பிள்ளைக்கு வாழைப் பழம்' காட்டும் விளையாட்டு நடவடிக்கைகளிலதானே ஈடுபட்டுள்ளார்கள், ஆளவந்தார்கள்! ஆட்சி வந்தோரின் இத்தகு முன் யோசனையற்ற நடவடிக்கைகளையும், சட்டத்தை மீறி சுரண்டலாத்பத்தியம் நடத்தும் கூட்டத்தைத் தண்டிக்க இயலாது திண்டாடும் கையாலாகாததனத்தையும் கவனித்து வரும் யாருக்குத்தான் ஆத்திரமும் சீற்றமும் வராதெனக் கேட்கிறோம்.

சர்க்கரை நெருக்கடி இருட்டெரும் உண்மையை வெளிப்படுத்தி விட்டதெனகிறார் கிருபளானி. சர்க்காரை சீர்மூக்க முதலாளிகள் திட்டம் போட்டுவிட்டனர் நாட்டவர் என்னதான் ஆதரவு நல்கினும் முதலாளிகள் தங்களது சமூகவிரோத பணப்பான்மை, சுரண்டல் கொள்கைகளால் நாட்டுநலத்தையே காட்டிக் கொடுக்கத் துணிந்துவிடுகின்றனர். இந் நாட்டில் முதலாளித்துவம் என்றென்றும் இக்கோர திருவிளையாட்டில் ஈடுபட்டே வந்திருக்கிறது!

"மரத்தின்மீது உட்கார்ந்து கொண்டு, சட்டைப் பையையும் நிறப்பிக்கொண்டு, அடிவேரையும் தாங்களே வெட்டிக் கொண்டிருப்பதை அவர்கள் மறந்து விடுகிறார்கள்."

இரண்டாவதாகப் புலனான உண்மை யென்ன? நமது நிர்வாகம் திறமையோ, புத்திசாலித் தனமோ எத்துணையும் இல்லாததாகும். நாட்டின் வருடாந்தர சர்க்கரை தேவை 10 லட்சம் டன்னுக்குள்ளேயே இருந்து வருகையில், 13-லட்சம் டன் சர்க்கரை திறந்த மார்க்கெட்டுக்கு வருமென உறுதியாகக் கூறப்பட்டது ஏற்றுமதி செய்ய மூன்று லட்சம் டன் மிகுதியாகக் கிடைக்குமென்றும் கூறப்பட்டது. ஆனால் எப்படியோ நெருக்கடி வந்துற்றிருக்கிறது? திடீரென வந்த இந் நெருக்கடிக்கு சாக்காட்டிய காரணம் என்ன? சர்க்கரை தேவை (உபயோகம்) அதிகரித்துவிட்டமையே இந்நெருக்கடிக்கு காரணமென கட்டுரைக்கப்படுகிறது. பல்லாண்டுகாலமாகவே மக்கள் தொகை பயங்கர அளவில் பெருகி வரும் நிலை சர்க்காருக்குத் தெரியாததல்லவே! இந்த பஞ்சம் பட்டினிகளுக்கெல்லாம காரணம் இதுதானே! தேவை பத்திலிருந்து பதி மூன்று லட்சம் டன்னுக்கு உயர்ந்து விட்டதெனவே வைத்துக்கொண்டாலும், சமமான விநியோக முறைக்கு ஏற்பாடு செய்ய வேண்டாமா சர்க்கார்? முதலாளிகள் வேண்டுமென்றே—சுரண்டல் மனப்பாவத்துடன — "சர்க்கரை தட்டுதல், கட்டுதல்" என்று கிளப்பிவிட்ட நேரத்தில், கடந்த ஆகஸ்டில் ஐக்கிய மாகாண சர்க்கார் ஸ்டாக் முடக்கல் உத்தரவு ஒன்று பிறப்பித்ததே, அது வொன்று போதாதா சர்க்கார் எவ்வளவு அலட்சியமாகவும், திறமையற்ற முறையிலும் நடைபெறுகிறதென்பதற்கு?

ஐக்கிய மாகாண சர்க்கார் எதை முடக்கினார்? ஆலைகளிலிருந்த சர்க்கரையையே அவர்கள் முடக்கினர், மொத்த சர்க்கரையில் 90 சத விகிதம் ஏற்கெனவே ஆலைகளைவிட்டு வெளியேறி விட்டதைக் கண்கெட்ட குருடனும் தெரிந்து கொள்வானே! பத்து சத விகிதத்தைத் தானே சர்க்கார் ஆலைகளில் முடக்கினர்.

ஐக்கிய மாகாண சர்க்கார் தாம் இத்தகைய உத்தரவைப் பிறப்பித்தனரே மத்திய சர்க்காரையாவது கலந்தார்களா? இல்லையே! புத்தி சாலித்தனமின்மை இவற்றுல் மட்டும் பிடித்திருக்கவில்லையே இன்றைய சர்க்கார்; ஒத்துழைப்பின்மை, ஒருமைப்பாடின்மை ஆகியவற்றுலும் பாதிக்கப்பட்டிருக்கின்றனர்!

மக்கள் பிரதிநிதிகளென்று கூறிக்கொண்டு ஆட்சி பீடமேறி, அர்த்தமற்ற யதேச்சாதிகார நடவடிக்கைகளிட்டு நாட்டவர் நலத்தைத் தினைத்துணையும் மனதிற்கொள்ளாது முதலாளித்துவத்தின் பிற்போக்கு அதிக்கக் கொள்கைகட்கு வளைந்து கொடுத்துக்கொண்டு, திறமை, புத்திசாலித்தனமின்றி நடந்து கொள்ளும் ஒரு சர்க்காரை "நல்லாட்சி புரியுங்கள், இன்றேல் வெளியேறுங்கள்" எனக் கூறுது, 'சபாஷ்' பட்டம் தர முடியுமா பொறுப்புள்ளோர், எனக் கேட்கிறோம்,

மறைவு

மூனர், டிச. 18—

இவ்வூர் பங்கஜம் டிபார்ட்மெண்டின் மானேஜிங் டைரக்டரும் பொதுநல ஊழியருமான தோழர் விசுவாசம் அவர்களின் மூத்த மகனை தோழர் தகைம விசுவாசம், இரண்டொருகாலமாக காய்ச்சலாக இருந்து 11—12—49 அன்று தனது 28-வது வயதில் இயற்கையெய்தினர். இவர் அமெரிக்கன் கலாசாலையில் பி. ஏ., படித்து பல போட்டிகளிலும் வெற்றிபெற்றிருக்கிறார்.

இவர் இயற்கை யெய்தியமை குறித்து பலவேறு ஸ்தாபனத்தைச் சேர்ந்தவர்களும், பொதுமக்களும் சவ அடக்கத்தின்போது வந்து தங்கள் இறுதி மரியாதையைச் செலுத்தினர்.

இவ்வூருள்ள கடைகளும், பள்ளிக்கூடங்களும் மூடப்பட்டு அனுதாபம் தெரிவிக்கப்பட்டது.

நான்குபேருக்கு ஒரு டெலிபோன்!



யு. எஸ். ஏ. (அமெரிக்கா)வில் மொத்த குடும்பங்களில் 63 சத விகிதத்தினர் டெலிபோன் பெற்றுள்ளனர். அந்நாட்டில் இன்று 40,000,000 டெலிபோன்கள் நடைமுறையில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன—அதாவது, நான்கு பேர்களுக்கு ஒரு டெலிபோன் வீதம் பெருகிக்கிடக்கிறது! அங்கு இவற்றுள் 13 கோடிக்குமேல இரண்டாவது உலகப் போருக்குப் பின்பு அமைக்கப்பட்டவையாகும். மொத்த டெலிபோன்களில் 27 கோடி வரை தனிப்பட்டவர்களின் வீடுகளிலும், 42 லட்சம போன்கள் கிராமியப் பகுதிகளிலுமுள்ளன. மேற்கத்திய யு. எஸ். ஸைச் சேர்ந்த ஆடு வளர்ப்பு வியாபாரியொருவர் தனது சொந்த டெலிபோன் மூலம் மார்க்கெட் நிலவரம் —போக்குவரத்து வசதி முதலியவை பற்றிய தகவல்கள் கேட்டறிவதை மேற்படம் காட்டுகிறது.

செய்தியனுப்புவோர் கவனிக்க,

'மாலை மணி"யில் வெளியிட அனுப்பப்படும் செய்திகள் யாவும் தெளிவாகவும், மிகச் சுருக்கமாகவும், விளக்கமாகவும், நல்ல கையெழுத்தில் உடனுக்குடன் எழுதியனுப்பவேண்டுகிறோம்.

(ஆ-ர்)

மார்பில் ஒட்டுண்ட இரட்டைப் பெண்கள்

லண்டன், டிச. 25—

ஒரு கடைாப் பெண்ணுக்கு இரட்டைக் குழந்தை பிறந்திருக்கிறதென்கிற செய்தியும், அக்குழந்தையின் படமும் லண்டன் பத்திரிகையில் வெளியிடப்பட்டிருந்தது. இதைத்தொடர்ந்து இம்மாதிரி எங்கெல்லாம் இரட்டைக் குழந்தைகள் பிறந்தன என்கிற தகவல்களைப் பலர் அப்பத்திரிகைக்கு எழுத ஆரம்பித்தனர் இந்திய இரட்டை குழந்தைகள் பற்றி ஒருவர் அனுப்பிய தகவல்கள் முழுவதையும் அப்பத்திரிகை வெளியிட்டிருக்கிறது. அதன் விவரமாவது:—

1889-ல் பூனாவில் இருபெண் குழந்தைகள் ஒன்றோடு ஒன்று ஒட்டிக்கொண்டு பிறந்தன. அவை பல ஆண்டுகள் உயிரோடிருந்தன. மார்புபுறத்தில் இருவருக்குமிடையே சதை ஒட்டிக்கொண்டிருந்தது. இவர்களுக்கிடையே சச்சரவுக்கே இடமில்லை. ஒருவருக்கு உடம்பு கெட்டால், மற்றொருவரின் பசி தீர்ந்துவிடும். ஒருபெண் ஒரு காரியத்தை ஆரம்பித்தால், மற்றொரு பெண் அதை பூர்த்தி செய்துவிடும்.

சண்டைகள் எல்லாம், அவர்கள் போதுதான் இருந்து வந்தது.

வி. பி. பார்சல் விதிகளில் மாற்றம்

புதுடில்லி டிச. 23—

வி. பி. சாமான்கள் வந்து சேர்ந்த பற்றிய தகவல் விலாசதாரருக்குத் தெரிவிக்கப்பட்டபின், அவை 5 நாட்களுக்கே தபால் ஆபீசுகளில் வைத்திருக்கப்படும் என்றும், முன்போல் 7 நாட்கள் வைத்திருக்கப்படமாட்டாதென்றும் தபால்-தந்தி டைரக்டர் ஜெனரல் ஒரு அறிக்கை மூலம் தெரியப்படுத்தியிருக்கிறார்.

இந்த ஏற்பாடு 1950, ஜனவரி மாதம் 1-ந் தேதி முதல் அமுலுக்குக் கொண்டுவரப்படும். மேலே குறிப்பிட்ட கால அளவுக்கு மேல் வைத்திருக்கும் வி. பி. பார்சல்களுக்கு நாளொன்றுக்கு 4 அணாவும் இதர வி. பி. தபால்களுக்கு நாளொன்றுக்கு 2 அணாவும் வாங்கப்படும்.

சந்தா விவரம்

(உள்நாடு)

ஒரு மாத சந்தா	ரூ. 2—0—0
மூன்று மாத சந்தா	ரூ. 6—0—0
ஆறு மாத சந்தா	ரூ. 12—0—0
ஒரு வருட சந்தா	ரூ. 24—0—0

மூன்றுமாதத்திற்குக் குறைந்த சந்தா ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. வி. பி. மூலம் அனுப்ப இயலாது

(வெளிநாடு)

மலேயா, பர்மா முதலிய இடங்களுக்கு:—

ஒரு மாத சந்தா	ரூ. 3—0—0
மூன்று மாத சந்தா	ரூ. 9—0—0
ஆறு மாத சந்தா	ரூ. 18—0—0
ஒரு வருட சந்தா	ரூ. 36—0—0

மூன்று மாதத்திற்குக் குறைந்த சந்தா ஏற்றுக்கொள்ளப்படாது.

வி. பி. மூலம் அனுப்ப இயலாது மானேஜர், "மாலை மணி"

அறிவிப்பு

ரெஜினா மூட்டைப் பவுடர், மூட்டைப்பூச்சி, எறும்பு முதலியவைகளை நாசமாக்கி, அயர்ந்த நித்திரை தருகிறது சாம்பிள் டின் 1-க்கு 8 அணா ஸ்டாம்பு அனுப்பவும் G. பழனியப்ப முதலியார், மதுரை.

வானொலி

(27-12-49 செவ்வாய்க்கிழமை)

சென்னை

[211·3 மீட்டர்கள்]

காலை:

7-15 தமிழில் செய்திகள்
7-30 எ. ஆர். கண்ணன்—பாட்டு
8-00 ஆங்கிலத்தில் செய்திகள்
8-15 சினிமாப் பாட்டுகள் (இ.த.)
8-50 வி. சந்திரா—பாட்டு

பிற்பகல்:

12-30 கே. வி. பாலசுப்ரமணியம்—பாட்டு
1-30 ஆங்கிலத்தில் செய்திகள்
1-40 சினிமாப் பாட்டுகள் (இ.த.)
2-00 தமிழில் செய்திகள்
2-45 நூல்வகை (இசைத்தட்டு)

மாலை:

4-00 எஸ். ஜானகி—பாட்டு
5-30 இசை விழா ஒலிப்பதிவு
6-00 ஆங்கிலத்தில் செய்திகள்
6-20 டி. வி. சந்தானம்-பாட்டு

இரவு:

7-00 சின்ன அண்ணாமலை—பேச்சு
7-15 தமிழில் செய்திகள்
7-30 நூல்வகை (இசைத்தட்டு)
7-45 கோட்டைவாத்தியம்
8-00 எஸ். என். ரங்கஜய்யர்—பாட்டு
9-00 ஆங்கிலத்தில் செய்திகள்
9-15 புல்லாங்குழல்
9-30 இசை விழா ஒலிப்பதிவு
10-30 முடிவு

திருச்சி

[395·8 மீட்டர்கள்]

காலை:

7-15 தமிழில் செய்திகள்
7-30 பி. ராமகிருஷ்ணன்—பாட்டு
8-00 ஆங்கிலத்தில் செய்திகள்
8-15 எஸ். எல். வசந்தகுமாரி (இசைத்தட்டு)
8-50 ஜி. ராஜாராமன்—புல்லாங்குழல்

பிற்பகல்:

1-00 சதம்பம் (இசைத்தட்டு)
1-30 ஆங்கிலத்தில் செய்திகள்
1-40 ஜி. ராஜாராமன்—புல்லாங்குழல்
2-00 தமிழில் செய்திகள்
2-10 கே. வி. ராகவன்—பாட்டு

மாலை:

5-00 பி. ராதாகிருஷ்ணன்—பாட்டு
5-30 சென்னையில் உள்ளபடி
6-00 ஆங்கிலத்தில் செய்திகள்
6-15 சித்ரகானம் (இசைத்தட்டு)
6-30 கிராம நிகழ்ச்சிகள்

இரவு:

7-15 தமிழில் செய்திகள்
7-30 என். லட்சுமிநரசிம்மன்—பேச்சு
7-45 சென்னையில் உள்ளபடி
9-00 ஆங்கிலத்தில் செய்திகள்
9-15 கே. வி. ராகவன்—பாட்டு
9-30 சென்னையில் உள்ளபடி
முடிவு.

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2-45, Muthumari Chetty Street, Madras-1.